****

ஸ்ரீ ரகுநாத் சாமிகள்,
சேந்தமங்கலம்,
சேலம்.
"வைத்திய அட்டவணை - கட்டு - 4"

****

2

294 - வைத்திய அட்டவணை - கட்டு - 4

Sir,
Palm leaf returned
[illegible] on 10.12.63.

10.12.63

தேதி:- 21.8.63.
ஓலைச் சுவடியின் பெயர்:- "வைத்திய அட்டவணை-4"
உரிமையாளரின் பெயர்:- ஸ்ரீ ரகுநாத சுவாமி.
இடம்:- சேந்தமங்கலம், சேலம்.

******

"வைத்திய அட்டவணை - கட்டு.4."

வல்வாதி:-

கஸ்தூரி, மஞ்சள், சதுக்சீரகம், ஓமம், சித்ரமூலம் சிறுதேக்கு, திப்பிலி மூலம், சித்திரத்தை, சிறு தேக்கதிமதுரம், தேசாவரம், சுக்கு, சிறு நாகப்பூ, மிளகு, சோம்பு, சேர், சீரகம், கோஷ்டம், திப்பிலி, நன்னாரி வேர், சாதிக்காய், வாய் விளங்கம், பேரேலம் குருசாணி ஓமம், வரும் வகைக்குப் பலங் கால் பாகமாகப் பறங்கிப் பட்டை பறங்கிப் பட்டை மூன்றி லாம் பருத்தி யிலில் தாய் வைத்த திட்டமா இடித்த வடி செய்து கொண்டு கிட்டாட செங்கொட்டை தாது பலத் சிகமலே வைத்து நீங்காமல் அரைத்து நிறுத்த கொட்டையுந் தாம் தேருக இடித்த முறத்திலே தென்றியே மூட பொரித்த என்று கொப்பரை முற்றும் மூன்று கூடும் வகைக் கொண்டு பலம் பத்து இதுவு மெல்லாஞ் சேர்த்து பார்த்து மெழுகு பதமா பிடித்து நேபச்செருத்த வெடியுவர் மன் கெந்தகம், வேறு வகைக்குப் பலங்கால் பொடி செய்து லேகியத்தில் போடு.

போடு மந்த லேகியமும் பொடியும் மொண்ணுச் கலந்த நடைப பிசைந்த வைவோ கலத்தில் தேடி வந்தால் நாடி முகம் பார்த்து நடக்குங் குணம் கேட்டு கடி எனம் பார்த்துக் கொடு. முற்று.

ரெண்டு பல. கள்ளி நேரயுருக்கி கண்டி அரைப் பல ரசத்தில் சார்த்த விடு ரெண்டு மொண்டியம் அத்தோடே பொட்டிலுப்பு அஞ்சு பலஞ் சேர்த்துப் புத்தியுடன் கல்வத்தில் போடு போடு மூன்று நாளைக்கு புளித்த காடி விட்டரைத்து ஒரு போல் வில்லை வில்லையா புருட்டிக் கொண்டு வெய்யிலில் நன்று உணர்த்த பின்பு நால் சுருவியிலே ஒன்றென் றாய்ப் புடம் போட்டெடுங்கு. ஒருவ்வு மந்த வில்லைதனை ஒரு தண்ணீர் விட்டரைத்து கருங் காரம் போகச் சட்டியில் கரைக்கச் சொருக்குமா தெளியத் தெளிய இறுத்துக் கரைத்திருக்க வடிபோட்டே காரமக்கப் போம். போமந்தச் சட்டிதனை பொய்லா வெயிலில் வைக்க நாமம் போல் காய்ந்து பற்ப நன்கும் சேமமாய் கருதாசியில் வைத்து கட்டு பணவிடை பற்பம் கொருத்தாக் கால் தேனில் கொடு. முற்று.

வெள்ளை பாஷாணம் முக்கால் பற்பம் வாங்கி ஒக்கபடி செய்தகலே ஒட்டிவிட்டு சிற்றடுப்பில் வைத்தே சிறுகச் சிறுகக் காடியே விட்டேவைத்து பத்திரமாய் புகையாமல் பாரு பாரிரண்டு சாமம் விளக்குப் போல் பாத் தெரித்து வீரியமாகு மருப்பை விட்டிறக் கி ஆறிய பின் ஒட்டில் மருந்தை உருளச் சிறைத் தெருத்து சட்டியே கல்வத்தில் கொட்டு கொட்டி பின் பாகலிலைச் சாறு கொஞ்சம் விட்டு ஒட்டிய தோப்பொரு சாமம் உரைத் திடவே வெட்டியாம். பாசிப் பயறளவுக் கேழுமன் பார்த்துருட்டிக் காசினியிழுவைத்தி கட்டு ஆய்ந்த அபம் ரெண்டு பலம் அதக்குச் சமன் கெந்தி தான் தேங்காய்ப் குச்சுரி பச்சேரிச் சாறும் தீர்த்த கல்லில் விட்டு சாமமரைத்து வில்லை மெல்லிசாய்ப் பிடித்து பொட்டென வெயிலில் காயப் போடு. போடு மந்த வில்லை யெல்லாம் உமிப் புடமாய் போட்டெடுத்து கரு கல்வத்திலதைக் கொட்டியே நடுமீதர் விட்டிரண்டு நாழி மெழுகு பதமா அரைத்து கட்டுப் போல்த் சுக்கி புரட்டு. உருட்டும் வில்லை யெல்லாம் ஊர வெய்யில் காய வைத்து அரட்டி யற அஞ்சாரவனி தனில் பிரட்டறவே வில்லைக் கொரு புடமாய் வெவ் வெறுப் புடம் போடச் செலவெல்லாஞ் செந்தூரமாம். செந்தூரந் தன்னைத் திரும்பப் பொடி செய்து அதக் குடுக்கைக் குள்ளா யடக்கி தொந்தமாய் பணவிடை செந்தூரம் பசு நெய்யிலுந் தேனிலுமாய் குணம் பார்த்து வழி தேடிக் கொடு கொடுக்கத் தான் தின்றல் சூழிய மேகச் சுடு, படுக்க வொட்டாப் பேசி பசி மந்தம் நெருங்குகிற மேனிவலிப்பு குத்திருமல் மீற ரத்தக் காசி ஓலயிட்டுக் கொண்டோடுமே.

பறங்கிப் பட்டைச் சூரணம்:-

அமரக் காற்லாம் பறங்கிப் பட்டை வாங்கி வந்து தட்டுக் கனத்துக்கு ககடு தகடாச் பாக்கு வெட்டியிலே வெட்டி ஒரு சட்டியிலே போட்டு அதின் மேலே வேலிப் பருத்திச் சாறு பிழக்க விட்டுச் சாறெல்லாம் பட்டையிலேறின பிறகு ஊறஞ்சல்லடையிலே பரப்பி நிழலாத்தியா யுலர்த்தின பிறகு ஒரு தாளியிலே கமலாக் காய்ச் சாம்பிராணி நாலு பலம் நசுக்கி நடுவிலே வைத்துப் பின் கட்டி மேலே வேடு கட்டி வேட்டு மேல் வட்டை வைத்துச் சட்டி கொண்டு மூடிச் சீலை மண் செய்து நாலு சாமம் தூங்கில் விறகு கொண்டு விளக்குப் போலெரித்து இறக்கவும். அட்டிடை சாப்பிடவும்.

அரக்கெண்ணெய்:-

பக்காப் படி எண்ணெய் ஒன்றுக்கு அரக்கு பலம்.௫, மிளகு பலம்.௨, வெந்தயம் விராகனிடை.௧, அமுக்கிறாக் கிழங்கு பலம்.௨, துளசிச் சாறு படி.௨, பசுவின் மோர் படி.௪, எண்ணெயோடே அரக்கு கஷாயம் வைத்து விடுகிறது. மிளகு வெந்தயமும் மோர் விட்டரைத்து மோரிலே கலந்து எண்ணெயோடே விடுகிறது. துளசிச் சாறும் எண்ணெயோடே கூட விட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சிச் சம்பிரியிலே வடி கட்டவும்.

சாதிலிங்கத்துக்கு:-

சாதிலிங்கத்துக்கு மிளகு பலம் சீயக்காய்க்கு நாலு படி தண்ணீர் விட்டு கஷாயம் வைத்து ஒரு படி தண்ணீரா யிறக்கிக் கொடுக்கிறது. தெளிவ்.

பறங்கிப் பட்டை லேகியம்:-

பறங்கிப் பட்டை பலம்.௭, சுக்கு பலம்.௩, சீரகம் பலம்.௩, சித்தரத்தை பலம்.௨, ஏலம் பலம்.௨, சாதிக்காய் பலம்.௨, நாட்டுச் சர்க்கரை பலம்.௫, இந்தச் சரக்கைச் சூரணம் பண்ணி இரண்டு படி பசுவின் பால் ஒரு சட்டியிலே விட்டு காய்ச்சி பாதிப்பால் அன்று பிறகு மேற்கண்ட சர்க்கரையைப் போட்டு கிண்டி கிண்டிக் காய்ச்சி அதற்கு மேல் மைகட்டி இருக்கிற சூரணத்தைப் பாலிலே போட்டுக் களிப் போலே இருக்கிற பிறகு கால்படி பசுவின் நெய்யை விட்டு நன்றாய்க் கிண்டி ஒரு ஏனக் கலசத்திலே வைத்து கொண்டு ஒரு போதைக்கு மிளகுக் காயளவு சாப்பிடவும். பத்தியம் புளிதவிர்க்கவும். நாவல் பட்டையை இடித்து நீராகாரத்தில் பிசைந்து வடிகட்டி அதற்குச் சமன் பசும் பால் கூட விட்டு நாலு பொழுது காலமே கொடுக்கவும். கிச்சிலிப் பட்டை ஜெமிச்சங் காயளவு அரைத்துப் பசுவின் பாலிலே குழப்பி மூன்று பொழுது கொடுக்கவும். பத்தியம்.

அமரத் தாருக் கற்பூரா சமூலம் கொண்டு வந்து இடித்து நாலு படி தண்ணீர் விட்டு கஷாயம் வைத்து அந்த கஷாயத்தில் கால்படி இறைத்து அத்தோடே கிராம்பு விராகனிடை.௨, சாதிக்காய் விராகனிடை.௨, சிறு நாகப்பூ விராகனிடை.௨, பொடி செய்து போட்டு அந்தி சந்தி ஆறு பொழுது கொடுக்கவும்.

மூலத்துக்கு தாளிச பத்திரி சூரணம்:-

சுக்கு பலம்.௩, மிளகு பலம்.௩, திப்பிலி பலம்.௩, தாளிச பத்திரி பலம்.௩, சாதிப் பத்திரி பலம்.௨, அதிமதுரம் பலம்.௩, ஏலம் விராகனிடை.௧, சிறுநாகப்பூ விராகனிடை.௧, லவங்கப் பத்திரி விராகனிடை.௧, லவங்கப் பட்டை பலம்.௧, கூகை நீர் விராகனிடை.௧, விலாமிச்சம் வேர் விராகனிடை.௧, சரக்கு வாங்கிச் சூரணம் செய்த சூரணத்தோடே பத்து பலம் நாட்டுச் சர்க்கரை கலந்து சாப்பிடவும். இச்சா பத்தியம்.

வெட்டை:-

கால்படி தேத்தான் கொட்டையைப் பச்சைத் தண்ணீரிலே அறுபது நாழிகை ஊற வைத்துக் கழுவி எடுத்து பாக்கு வெட்டியிலே சன்னமாய் நறுக்கி வெள்ளாட்டின் பாலிலே ஊற வைத்து அம்மியிலே நேக அரைத்து கால்படி வெள்ளாட்டின் பாலே

விட்டுக் குழப்பி பழச் சாறு கால்படி கூட விட்டு அடுப்பிலே வைத்து எரித்துக் களிப் பத மாய் வரச்சே பனை வெல்லம் பலம்.ரு கூடப் போட்டு கிண்டிப் பசுவின் நெய் கால்படி கூட விட்டுக் கிண்டி இறுத்துப் பாக்களவு.

அண்ட வாதம்:- கட்டடை பலம்.வ, நல்ல வெல்லம் பலம்.வ, அன்னம் பலம்.வ, பிசைந்து கொடுக்கவும்.

மஞ்சள் காமாலை:-

கோழியவரைச் சாறு படி.வ, பசுவின் பால் படி.வ, சேர்த்து மூன்று காலமே கொடுத்து பாலுஞ் சோறும் உப்பில்லாமல் சாப்பிடவும். வெள்ளாட்டுப் பிச்சு எடுத்து அரிசி மாவில் கலந்து கொழுக் கட்டை சுட்டுச் சாப்பிடவும். உப்பாகாது.

அத்தி மாலை:-

பழைய ஈர வெங்காயம் நீர் பலம் சிறுக அரிந்து பசு நெய் கொஞ்சம் விட்டு பொன்னிறமாய் வறுக்கச்சே அரைப்பலம் சீரகத்தைக் கூடப் போட்டு வசத்த பனை வெல்லமொரு பலம் கூடப் போட்டுக் கிண்டி இறக்கி வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் அரைப் பலம் திட்டம். இச்சா பத்தியம்.

பனை காய ரத்தம்:-

நல்வெள்ளை ஊமத்தை யிலைச் சாறு வசம்பு புண்டு இந்த நாலு வகையும் எரித்து காதிலே உத்தவும்.

வெள்ளை ரத்தமும் ஊற்றுகிறதுக்கு:- எருக்கம் பூவைக் கசக்கி தயிரிலே நாலு துள்ளி சுத்தி மந்திரித்துக் கொடுக்க நிற்கும்.

வெட்டையிலே உருகிப் போகும் பிள்ளைகளுக்கு:-

விளக்கெண்ணை படி.க, இளநீர் படி.வ பழச் சாறு படி.வ, ஈர வெங்காயச் சாறு படி.வ, கேதவைப்பிலைச் சாறு படி.வ, தவசி முருங்கைச் சாறு படி.வ, புளியாரைச் சாறு படி.வ, வல்லாரைச் சாறு படி.வ, மணத்தக்காளிச் சாறு படி.வ மூடச் கொத்தானில் எரிக்கிற போது கொஞ்சம் போடுகிறது. பால் படி.வ, கத்தாழைச் சோற்றில் நாலு கருங்காய்த் துள் போட்டுப் பிசைந்து புளிந்த சாறு படி.வ, வறப்புலாச் சாறு நீர்ப் பலாச் சாறு பழம் பாசிச் சாறு, நெருஞ்சிக்கைச் சாறு வகை ஒன்றுக்கு படி.வ, அத்திப் பட்டை முக்குறட்டைப் பட்டை வேர் அரைத்த வகைக்கு ஒரு பலம் விட்டு எரித்து இறக்கி மேல் பொடி சாதிக்காய் சாதிப் பத்திரி, ஏலம், கிராம்பு, வகைக்கு விராகனிடை.க, அதிமதுரம் விராகனிடை.உ, சென்பகப்பூ விராகனிடை.ச, கோரோசனை பலம். கோஷ்டம் பலம்.1/16, காயப் போட்டு இடிச்சு வடிகட்டி எண்ணெயிலே போடுகிறது.

மேகத்தால் பெரிய வியாதிக்கு:-

ஒரு பானையில் கல்லுப்பு ரெண்டு படி கொட்டி அதின் மேலே இரண்டு படி உப்பைக் கொட்டி மேல் சட்டி மூடி புதைத்து மூன்று மாதத்துக்கும் பிறகு எடுத்து அதிலிருக்கிற அசடுகளைப் பொறுக்கி எறிந்து போட்டு தேவையானதை எடுத்துப் பொடி செய்து வைத்துக் கொண்டு வேளைக்கு பணவிடையாக இரண்டு வேளையும் நாற்பத்தைந்து நாள் விடாமல் சாப்பிடவும். இச்சா பத்தியம். சிதாபல மாகாது.

வெள்ளைப் பாசாணம் பன்னிரெண்டு ரச பாசாணம் பாகற் சாறு, கருங்கத்தை விளக்கெண்ணையில் போட்டு உருக்கியம்மான் பச்சைச் சாற்றில் ஒன்பது நாள் விட்டு அப்பால் மிளகரணையிலையில் மேற்கண்டச் சாறு விட்டு தேங்காயளவு கவசஞ் செய்து இஞ்சிய பிறகு புளியம் விறகும் வரட்டியுமாய்க் குழிப்புடம். கார்த்திகைக் கிழங்கில் வெள் வங்கத்தைப் புகட்டிப் புடம்.

மேகத்துக்கு:-

விளக்கெண்ணை படி.க, கருவை நீர் படி.ரு செருப்படி விழுதி பூவரசு, தக்காளி,

கள்ச்சி நூறு செங்கழுநீர்காரியிலை எலுமிச்சச் சாறு படி.௨, விட்டு காய்ச்சி வடித்து மூன்று நாளைக்கு உள்ளுக்கு கொடுக்கிறது. உப்பில்லை.

மேக_குட்டைன்னை:-

உசிம் பட்டை பிரமியிலை, கடுக்காய்.ச இந்த மூன்றும் கசாயம் போட்டு ஒருபடி தண்ணீர்விட்டு சமன் விளக்கெண்ணை விட்டுக் காய்ச்சி இறக்கிறது. மருதோன்றியிலை விராகனிடை.உ, நிலவாகைத் தாவே எருமைச் சாணியில் திரித்து ஒரு நாள் வைத்திருந்து அதை எடுத்துக் கழுவிப் போட்டு பொடி பண்ணிக் கிறது. கருஞ்சீரகம் விராகனிடை.க, வறுத்துப் பொடி செய்து இந்த இரண்டு பொடியும் காய்ச்சி இருக்கிற எண்ணையில் கலந்து அந்தி சந்தி ஒரு காசிடையாக உள்ளுக்குக் கொள்ளவும். சகல சூடும் வாங்கும். பத்தியமில்லை. வாய்வு பதார்த்தமாகாது, விளக்கெண்ணை படி.க, வெங்காயம் படி.ஈ ஆனை நெருஞ்சி மூன்றும் இதுக அரிந்து போட்டுக் காய்ச்சி இலை முறுகின பார்த்து வடித்துக் கொண்டு காசிடை எண்ணை கொள்ளச் சூடும் கணையும் வாங்கும்.

மேக_நெய்:-

சாதிக்காய், சாதிபத்திரி வகைக்கு விராகனிடை.ரு, குறுயப் போட்டு பொடி செய்து வைத்துக் கொண்டு ஆவின் நெய் படி.௧, பூவரசிலைச் சாறு படி.௧ இந்த இரண்டும் கலந்து காய்ச்சி மெழுகு பதத்தில் சீனி சர்க்கரை பலம்.அ, போட்டு அந்த பாகிலே மேற்கண்ட பொடியைக் கொட்டி வேளைக்கு கழஞ்சியாக சாப்பிடவும். அஸ்தியாயுள்ள சரீரம் தேறிப் போம். (நீர்க்கோட்டை நிலப்பனைக் கிழங்கு பலம்.உ, நீர்முள்ளி விதை பலம்.க இச்சா பத்தியம்.

இருமலுக்கு:-

நெய் படி.க, வல்லி யிலையை உருவி முக்கால் காச்சலான பிறகு இடித்து முக்கால் படி காணும் ஒரு சட்டியில் போட்டு பத்து தேத்தாங் கொட்டை சீவிப் போட்டு மூன்று படி தண்ணீர் விட்டு ஒரு படியாக் காய்ச்சி அந்த நெய்யில் மேற்படி ஐந்தாகு பழச் சாறு பிழிந்து எல்லாங் கலந்து காய்ச்சி அந்தி காலமே சாப்பிடவும். பத்தியமில்லை.

நீரழிவுக்கு:-

கழுதை தும்பியிலை எலுமிச்சங் காய்ப் பிரமாணம் அரைத்து நீராகாரத்தில் கரைத்துக் கொடுத்து உடனே சீரகமும் சீனிக் கற்கண்டும் நசுக்கி எலுமிச்சம் பழத்தில் வைத்து நக்கிப் போடுகிறது. இந்தப் படி மூன்று நாள் ஆறு வேளைக்குக் கொடுத்து பத்தியம் பிடிக்கச் சொல்லவும்.

வெட்டைக்கு:-

தேயிலம் பட்டையை அரைத்து தயிரோடே சேர்த்து மூன்று பொழுது கொடுக்கவும்.

எலி கடிக்கு:- எருக்கம் பால் கொண்டு வந்து அல்லறைத் திசை முழுதும் கடித்த வாயில் பூசி அடிக்கவும்.

பேய்_நாய்_கடிக்கு:-

நாய் கடித்த பதினைந்து நாளைக்கும் பிற்பாடு ஊமத்தை யிலையும் பூண்டு மிளகு அரைத்துக் கொடுக்கிறது.

(தலை ஒரு கொண்டு வந்து ஆள் பண்ணிச் அஞ்சுபு நீர் விட்டரைத்து குகை பண்ணி மேல் ஒரு பொன்மை செய்து காய வைத்து தாளகத்தின் கட்டி வைத்து சில் விட்டுச் சீலை செய்து உலர வைத்து ஊதி புடம்.

வீர_பற்பம்:-

இருப்பைக் கிழங்கு புளியஞ் சாம்பலெடுத்து உப்பாய்க் காய்ச்சி மேனிச் சாறு விட்டரைத்துக் குகை பிடித்து அதுக்குள்ளே சாரத்தை வைத்து மேல் மூகை செய்து சீலை

செய்து கோழிப் புடம். முத்துக்கு அண்டம் நீர் விட்டரைப்பது.

<u>பேய் நாய் கடிக்கு</u>:-

ஊமத்தையிலையும், நல்ல வேளையிலையும் அரைத்துப் பாலில் கலந்து கொடுக்கிறது சத்து நேரம் ஓலைக்கும். அவ்வேரம் தண்ணீரில் அமத்திப் பச்சரிசிச் சாதமும் மோரும் ஈர் வெங்காயமும் கொடுக்கிறது. அன்று ராத்திரி மேற்கண்டச் சாதமும் பாலும் பாசிப் பயறும் பொங்கிச் சாப்பிடவும். மருந்து கொடுத்த ஐந்து நாள் மறக்காலைப் பட்டை அரைத்து தலையில் தேய்த்து பச்சைத் தண்ணீர் விடவும்.

<u>ரெத்தக் கடுப்புக்கு</u>:-

எருமைத் தயிரில் மூன்று துள்ளி ஊமத்தஞ் சாறு விட்டு மூன்று காலமே சாப்பிடவும். சாதத்திலே வேப்பிலையை வறுக்கும் போது ஓமத்தையும் கூடப் போட்டு வறுத்து நறுக்கி போட்டுச் சாப்பிடவும்.

<u>சீதத்துக்கு</u>:-

கருவேப்பிலையை நன்றுய் காய வைத்து நசுக்கி வைத்துக் கொண்டு புன்னைக் காயளவு விளக்கெண்ணெயில் மத்தித்து உள்ளுக்கு கொடுக்கவும்.

<u>ரெத்த பேதிக்கு</u>:-

அதிவிடையம், கிராம்பு, சாதிக்காய், கசகசா, கற்கடக சிங்கி, ஏலம், கிராம்பு, சிறுநாகப்பூ, கடுக்காய்ப் பூ, புளியங் கொட்டைத் தோல், மாங்கொட்டை, பருப்பு இதுவெல்லாம் வாட்டி மாதளைப் பழத்தை வில்லையா அறுத்து விதையைப் போக்கி அதுக்குள்ளே மேற்கண்ட மாவைக் கொட்டி வில்லை மருவி காடைத் துணி கொண்டு சுத்தி சாணக வசங் கட்டி படம் போட்டு வெந்த பிறகு எடுத்து புளியாரைக் கசாயத்தில் அரைத்து உருண்டை பண்ணி நிழலுலர்த்தி அந்தி சந்தி சாப்பிடவும்.

<u>புறங்கிப் பட்டைப் பதங்கம்</u>:-

கொடிவேலி, கருஞ்சீரகம், சாம்பிராணி, கெவுரி பாஷாணத்தை மனத்தக் காளிச் சாற்றில் நாலு நாழி ஊற வைத்து மேற்கண்ட சாத்தில் காரீயத்தை அரைத்து கவசங் கொடுத்து புடம் போடவும்.

காடிக் காரத்தை மூலைப் பால் விட்டரைத்து குகையில் பூசி அதுக்குள்ளே வீரத்தை வைத்து சில்லுப் போட்டு சீலை மண் செய்து ஒரு விருட்டியை முறித்து வைத்து அதின் மேல் குகை வைத்து வெந்ததின் பிற்பாடெடுத்து வைத்துக் கொண்டு அநுபானம் சந்தனத்தில் குழப்பி குஷ்டத்திற்கிடவும்.

அட்டு நேர்வாளம் காரீயத் தகடு பெருங்காயம், சீரகம், வாய்விளங்கம், கொத்தமல்லி, செவியம், சுக்கு, மிளகு, திப்பிலி, கோஷ்டம், கடுக்காய், சித்திர மூலம், அசமதாகம், வெல்லம், பொட்டிலுப்பு, லிங்கத்தை ஒரு சாமம் பழச் சாத்தில் போட்டு கரு வெய்யிலில் வைத்து சுண்டுகிற பக்குவத்தில் அதை எடுத்து நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு மேல்ச் சட்டியில் முள்ளு முருக்கிலைச் சாறு விட்டு நன்றாய்த் தடவினக காய போட்டு வாழையிலைப் பசப்புச் சாறு தடவி வெயிலுலர்த்தி கீழ்ச் சட்டியில் கொடிவேலித் தாளை நடு மையத்தில் வைத்துப் பரப்பி நடுவே மேற்கண்ட லிங்கத்தை வைத்து மேற்கண்டத் தாளை மேல்க் கொட்டி மேல்ச் சட்டி மூடி ஏழு சீலை மண் செய்து நன்றுய்க் காய வைத்து சாயரட்சிக்கு சூட்டடுப்பிலேத்தி மற்று நாள் சூரிய உதையம் வரைக்கும் பாளை விறகு கொண்டு கமலாக்கினி போலெரித்து எடுத்து நெடுகத்தில் படுக்கப் போட்டு உபாயமாய் சீலை மண்ணெடுத்து கட்டான பஞ்சி மயிரால் துடைத்துக் கிட்டித் தசிமில் வைத்துப் புளியவும். ரசம் விழும். அந்த ரசத்தை கல்வத்தில் விட்டு விராகனிடைக்கு கால் படி கண்டங் கத்திரிச் சார் பதினஞ்சு நாளரைத்து சிமிழில் அடைத்துக் கொள்ளவும்.

<u>சீரத்துக்கு</u> :- சீதா செங்கழுநீர் கசக்கி மூக்கில் மோர்க்கவும். காட்டு முள்ளி

வேரைக் கையில் கட்டவும். கஞ்சாங் கோரை இடித்துச் சுரசம் பண்ணி அதில் மேவிச் சார் ரெண்டு துளி விட்டுச் சாப்பிடவும் வெட்டை தீரும்.

விரை வாதத்துக்கு:-

இலுப்பைக் கட்டி அரைத்து தவிட்டில் பிரட்டி உள்ளுக்குச் சாப்பிடவும். உப்பில்லை. பெரிய வியாதிக்கு:- ஒரு பானையில் ----த்து இரண்டு படி கொட்டி மேலே இரண்டு படி விரியன் பாம்பு அடித்துப் போட்டு மேலே இரண்டு படி ----புத்துக் கொட்டி மேல்ச் சட்டி மூடிக் கவுத்து புதைத்து மூன்று மாதத்துக்கும் பிறகு எடுத்து அதிலிருக்கிற அசடுகளைப் பொறுக்கி எறிந்து போட்டு தேவையானது பொடி செய்து வைத்துக் கொண்டு வேளைக்கு பணவிடையாக ரெண்டு வேளையும் நாற்பத்தஞ்சு நாள் விடாமல் சாப்பிடவும். புளி, புகையிலை, பழையது வாய்வு பதார்த்தமாகாது. ஸ்தானமுமாகாது.

மேகத்துக்கு:-

விளக்கெண்ணை படி.க, பறங்கிப் பட்டை பலம்.உ, சீரகம் பலம்.உ, கடுக்காய் பலம்.உ, சுக்கு பலம்.கூ நாலும் அரைத்துப் போட்டுக் காய்ச்சவும். நல்ல வெல்லம் களச்சி அளவில் எருக்கம் பால் இரண்டு சொட்டு விட்டுப் பிசைந்து இரண்டு காலமே கொடுக்கிறது. வாந்தியானால் சீரகக் கசாயம் கொடுக்கவும். மூன்று கடுக்காள் உள்க் கொட்டை எடுத்துச் சுட்டு தேனில் மத்தித்து கொடுக்கவும். நருவலிக் கொழுந்தும் சீரகமும் எருமை மோர் விட்டரைத்துக் கொட்டைப் பாக்களவு ஒரு சேரை மோரில் கொடுக்கவும். விடத் தலை வேரும் சீரகமும் மேற்கண்ட மோரில்லரைத்து மூன்று காலமே கொடுக்கவும். இந்துப்பு விராகனிடை.ரு, நமச்சாரம் விராகனிடை.உ, எவட்சாரம் விராகனிடை.உ வீரம் விராகனிடை.ரு இந்த நாலும் நறுக்கி வைத்து தேங்காயைப் பொத்துத் தண்ணீர் வடித்துப் போட்டு அதுக்குள்ளே இந்தப் பொடியைக் கொட்டி சதுரக் கள்ளி கொடிக் கள்ளிப் பாலிரண்டும் நிறைய விட்டு அவாரமடைத்து கொஞ்ச நாள் நிலத்தில் புதைத்து சுட்டு ஒரு கருகல் பாத்தெடுத்து அரைத்து வைத்துக் கொண்டு ஒன்று விட்டொரு நாள் காலமே மாத்திரம் புளியங் கொட்டை அளவு கொடுக்கவும். இச்சா பத்தியம். கட்டி முதல் தீரும்.

ரசாயனம்:-

பறங்கிப் பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி, சித்தரத்தை, கண்மந் திப்பிலி, ஓமம், கோஷ்டம், அக்கிருகாரம் அதிமதுரம் குரசாணி ஓமம் கசகசா, சன்ன லவங்கம், தாளிச பத்திரி, செவியம், சித்திர மூலம், பேரரத்தை, கருஞ்சீரகம், சிறுநாகப்பூ, சாதிக்காய்; கடுக்காய், நெல்லி முள்ளி தானிக்காய், சடாமாஞ்சி, கார்போகரிசி, கூகை நீர், ஏலம், வால் மிளகு, வகைக்கு பலம்.வ, சீனிச் சர்க்கரை சமன் செங் கொட்டை பலம்.ச, நெய்யில் சாரம் வாங்கி தேன் படி.ச, விட்டு மேற்கண்ட பொடியைக் கொட்டிப் பிசைந்து சாப்பிடவும். இச்சா பத்தியம்.

ஏலாதி சூரணம்:-

சுக்கு, திப்பிலி, கொத்தமல்லி, லவங்கப் பத்திரி, அதிமதுரம், கோஷ்டம் சீந்தி தண்டு, நன்னாரி, ஏலம், கிராம்பு, கருஞ்சீரகம், முத்தக் காசு, சந்தனம், வேப்பம் பூ, நெருஞ்சி வேர், அரத்தை, சிறுநாகப்பூ, முந்திரிப் பழம் வேர், வெள் சாறணை வேர், சடாமாஞ்சி வகைக்கு பலம்.வ, சாதிக்காய் விராகனிடை.உ, ராம்புரி சர்க்கரை பலம்.ய, வேளைக்கு மூ விரல் கொண்ட சூரணம் தேமதுபானமாகச் சாப்பிடவும். மேகம், பித்தம், வயறெரிச்சல், சகலமுந் தீரும். இச்சா பத்தியம்.

கெந்தகம்:- திருவளர்க யிலைச் சிவனுமைக் களித்த அருள் வளர் கெந்தக வமுத சஞ்சீவி வருமுறை தன்னை வயித்தியர் கேள்மின் பரவு கெந்தகமோர் பத்துக் களங்காய் இருப்புக் கரண்டியிலிட்டு விளங்கு நற் பசுவின் வெண்ணை போட்டுருக்கி ஆவின் பால் தனி

22.8.63.

ஐந்து திரமு மப்படிச் சாய்த்துக் குப்பை மேனி குறிகரிசாலை ஒப்புடன் பொன்னுங்காணி
யிம்மூன்றும் வெவ்வேறாக வித விதம் பறித்து ஒவ்வோர் படி சாறென்றாய் விட்டு செப்ப
மாய்க் காய்ச்சி தெளிந்த பின்னிறுத்து வெப்பறத் தாழை விழுது நீர் நாழி சுருள்ச் சாறு
இம்முறை கூட்டிச் சாறெல்லா மொன்றாய் சாறுக்கில் விட்டுத் தோய்ந்த கெந்தக
மின்னீரிலரைத்து சுர்ந்திரு சாமம் குறைபடாதரைத்து கண் பொலி சாத்தில் கரைத்துடன்
காச்சி பஞ்பினிற் பா_ பதத்தினிறக்கி நல்லதோர் கலசத்தில் நலம் பெற வடைத்து
சில்லது மூடிச் சீலை மண் செய்து திருந்துமோர் பட்சந் திரை குறையாமல் பொருந்து
தானிய புடத்தில் வைத்தெடுத்து பணவிடை யொன்று பகர் வெத்திலையில் ளுளத்துடன்
தடவிக் கொள்ளுங் குறி கேள் மாலையுங் காலையு மண்டலங் கொள்ள பாலுடன் நெய்யாப்
பகர்ந்தூ துவளை குஞ்சுக் கீரை, கொடி யரைக் கீரை, பிஞ்சுக் கத்திரி, பேசும் நல்
முருங்கை, உள்ளி நல் வெள்ளாட்டுப்புக் கண்டம் தள்ளு நற் கெளிறு சுறுவுடன் திருக்கை
குக்குடங் காடை குறு முசல்ப் பாகமாம் பச்சைப் பயறு பாரிந்த நல் துவரை மூர்ந்து
உப்பு முறிந்த மோர்த் தெளிவு சந்தங் கொள்ளச் சார் பிணி தீர்க்கும் மேகங் கிரந்தி
வெடித்திடும் சூலையாக மாஞ் சன்னி யரோசிகந் தொடரும் வாத ரோகம் வயத்திலில்
கெண்டை சோதர குஷ்டம் குன்ம ரோகங்கள் கட்டவுள் மூலம் கனத் தெழும் வாய்வு
பிடிபடாதீர்க்கும் பெரும் பிணி முதலாய் அடங்கு நற் கெந்தக வமுத சஞ்சீவியைத்
தடங்கியே யுண்பார் சுகம் பெறுவாரே.

பித்த_சூலை__பாண்டு_காமாலைக்கு:-

வல்லத்துக் கிட்டத்தைத் கொல்லுமுலையில் போட்டுக் காய்ச்சி வெள்ளாட்டுக் கோ யத்திலே ஏழு தரம் போட்டெடுத்து அரைப் பல மிளகு கூடப் போட்டு கையாந்தகரை சாறு விட்டு ஒரு சாமம் நன்கு அரைத்துப் பாதியைக் களச்சிக் காய்ப் பிரமாணத்துக்கு உருட்டி நிழலில் உலர்த்தி வல சுத்தி தாராளமா யிருக்கிற பேருக்கு ஒரு சேரை பசுவின் மோரிலே சாப்பிடவும். பாதியு முலர்த்தி நன்றுப் பொடி செய்து விளக்கெண்ணை விட்டு அரைத்து களச்சிக் காயளவு இரண்டு வேளையுங் கொடுத்தால் வல சுத்தியாகும். வயத்து வாய்வுக் கட்டி கெண்டை வீக்கம் முதல் தீரும். இச்சா பத்தியம்.

அரப்பொடி பலம்.க, கிட்டம் பலம்.க், காந்தம் பலம்.ஞ, இது மூன்றும் பொடி பண்ணி எலுமிச்சம் பழம்.ய, ஒன்றை நாலாய் வகுந்து பொடியைக் கூட் கொண்டு சிறுக் கொட்டையிலையில் பத்து பொட்டலங் கட்டி இரண்டரைப் படி வெள்ளாட்டுக் கோமியத்திலே வேக வைத்து நீர் சுண்டின பிறகு இலை முதலாய் அம்மியில் வைத்து கையாந்தகரைச் சாறு விட்டரைத்து உருட்டி உலர்த்தி மிளகு, சீரகம், சுக்கு, திப் பிலி வகைக்கு பலம்.க, வறுத்து நறுக்கி உருண்டை மருந்தில் ஒரு பலம் போட்டு நல் நூய் நறுக்கு மேற்கண்ட சாற்றிலே நல்ல வெல்லஞ் சமன் போட்டு பாகு காய்ச்சி அந்தப் பாகிலே பொடியைப் போட்டுக் கிளறி வைத்து அந்தி காலமே விராகனிடை.க வீதம் உள் கொள்ளத் தீரும் புளி பழையது, வாயு பதார்த்தம், புகையிலை ஆகாது. மூன்று நாளைக் கொருதரம் நீர் தானம். பால் நெய், சவுக்கியம் வேணும். பித்தம் பாண்டு தீரும் பிசகில்லை தான்.

கண்_வலி:-

கிட்டத்தை நறுக்கித் தெள்ளி ஒரு சேரை எடுத்து கெட்டிக் கோணியில் வைத்து களச்சி அளவு கூடப் புளியும் பிசைந்து உருட்டி அதுக்கு நடுவே வைத்து பொட்டலங் கட்டி எலுமிச்சங் காயளவு புளியைக் கரைத்து அதில் பொட்டலத்தை ஒரு சாமம் ஊறப் போட்டு மூன்று பொழுது சுத்தி ஒத்தடம் போடவும்.

நேத்திர_வாய்வுக்கு:-

பீதரோகணி விராகனிடை.ச, திப்பிலி விராகனிடை.க, மிளகு விராகனிடை.ங, கடுக்காய் பருப்பு விராகனிடை.ஙு, நெல்லிக் காய்ச் சாறு விட்டரைத்து மாத்திரை அனு பானம் வெள்ளெழுத்துக்கு முலைப் பால் கண்ணெரிவுக்குத் தேன், நாக படலத்துக்கு கைய்

அவரியிலைச் சார், மகுத கீழா நெல்லிச் சார், நேத்திர வாய்வுக்கு, நந்தியா வட்டைச் சார் முருங்கைப் பூச் சார் நாயுருவிச் சாறு மூலைப்பால் அமரத்துக்கு பச்சை மஞ்சள் சாறு போடவும்.

<u>வெள்ளை கருப்புக்கு:-</u>

சீரகம், ஈர வெங்காயம், நெருஞ்சிப் பூ, நசுக்கி முலைப் பாலில் நனைத்து குத்தவும். ஊமத்தையிலையைக் கசக்கி அந்தப் பக்கத்துக் காதில் பிழியுறது. இரண்டு கண்ணுக்கும் வந்தால் இரண்டு காதிலும் பிழியவும்.

<u>மயிர் உதிர்ந்து போகிறதுக்கு:-</u>

நார்த்தம் பழம் நாறு சாறு பிழிந்து அரைப்படி நல்லெண்ணை கலந்து காய்ச்சி முடுகவும். விளக்கெண்ணை கையாந்தகரைச் சாறு சமன் கலந்து சூரிய புடம் வைத்து தடவிக் கொண்டு வரவும். தோடையிலை ஊ தவளை கண்டங்கத்திரி, தோராத முருக்கிலையும், தோய்த்துக் கொண்டு வேடாக வாய் கட்டி வெந்தவாறே வறகாக வடித்த தலைப் புளிந்து கொண்டு நாடரிய திரிகடுகு பொடியுந் தூவி நலமாகத் தேன் விட்டுக் கொள்வீராகில் ஓடி வருஞ் சுவாச காசம் பித்தம் உள் மாந்தை எலிகடியும் ஓடிப் போகும்.

<u>பேதிகட்டுகிற மாத்திரை:-</u>

சூடன், மிளகு, அவின் சமன் லிங்கம் பங்கு கால் ரச கற்பூரம் பங்கு கால் கோவைச் சாறு விட்டரைத்து ஒரு சாமம் குன்டு மணிப் பிரமாணம் உருட்டி நிழலில் காயவைத்துக் கொண்டு கசாயம் தும்பை வேளை குப்பை மேனி குத்து வீதன் குறுக அரிந்து கருக்கிக் கொட்டிப் போட்டு சித்திர மூலம், சிந்தனத்தை பொன் முசுட்டை வேர், சுக்கு மிளகு, ஓமம் வகைக்கு விராகனிடை.க பொன்னிறமாய் வறுத்து ஒரு படி தண்ணீர் விட்டு வசம்புத் தளியில் சுத்தி அடுப்பில் போட்டு வேக வைத்து மேற்கண்ட கசாயத்தில் தட்டிப் போட்டு நன்று எரித்து வீசம் படி இறக்கி ஒரு உருண்டை உரைத்து உள்ளுக்கு கொடுக்கவும். இது நேரிடா பட்சத்துக்கு புங்கயிலை ஒம் குத்து கான அறுத்து வறுத்து ஓமமுங் கூடப் போட்டு பொதிந்த பிறகு முன் போலே வசம்பு போட்டெரித்து உரைத்துக் கொடுக்கவும்.

<u>காந்தலாலே உருகுவதுக்கு:-</u>

மிளகு, திப்பிலி, சீரகம், ஏலம், கண்டந் திப்பிலி, கொத்தமல்லி வகைக்கு பலம்.ச, வறுத்துப் பொடி செய்து சாதிலிங்கம் விராகனிடை.உ முலைப் பால் விட்டு சுருக்கு கொடுத்து பொடி செய்து சீனி சர்க்கரை பலம்.உ, பருத்தி மாவு படி. நெல் பொரி மாவு படி.1/16., இந்தப் பொடிகளை ஒன்றாய்ப் பிசைந்து வைத்து வேளைக்கு விராகனிடை.கா வீதம் சாப்பிடவும். அஸ்தி சுடும். அரோசியமும் வாங்கும்.

<u>ரத்தக் கடுப்புக்கு:-</u>

விச்சிக் கொழுந்தும் பூவும் நெய் விட்டு வறுத்து அரைத்து மூன்று காலமே கொடுக்கவம். சீதமாய் விழுந்தால் பெருங் கம்பு மாவு பங்கு.க, கருதும்பை அரைத்து விழுது பங்கு.க, பனை வெல்லம் பங்கு.க, எல்லாம் பிசைந்து ஆவின் நெய் படி.வ, விட்டு காய்ச்சி அதில் மேற்கண்ட மோத்தையை உதிர்த்தி அளாவிக் கொடுத்து இறக்கி வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் சாப்பிடவும். வேளைக்குப் புன்னைக் கொட்டை அளவு மூல மறபடும்.

<u>வெள்ளை ரத்த மூலத்துக்கு:-</u>

கால் படி தேத்தாங் கொட்டை பச்சைத் தண்ணீரில் ஊற வைத்துக் கழுவிப் பாக்கு வெட்டியால் சன்னமாய் நறுக்கி வெள்ளாட்டின் பாலிலே பிசறி வைத்து நன்றாய் மலற ஊறின பிறகு மேற்கண்ட பால் விட்டு மை போலரைத்து குழப்பி அதிலே பழச்

படி.வ, பசுவின் நெய் படி.வ, அதுக்குத் தக்க படி வெல்லமும் நறுக்கிப் போட்டு அடுப்பிலே வைத்து விளக்குப் போலெரித்துக் கரண்டியிலேயே அடி பத்தாமல் கிண்டி தண்ணீர் சுண்டின பிறகு இறக்கி வேடு கட்டி வைத்து சிறு எலுமிச்சங் காயளவு இரு வேளையும் சாப்பிடவும். இச்சா பத்தியம்.

<u>நீர்க்_கடுப்புக்கு</u>:-

நாற்பறு நத்தை கசாயம் போட்டு ஒரு குட்டிடை நல்லெண்ணெ விட்டுக் கொடுக்கவும். பச்சை அரிசிக் கழுநீரில் சீனி சர்க்கரை போட்டுக் கொடுக்கவும்.

<u>ரத்தக்_கடுப்புக்கு</u>:-

சீரகம் பலம்.ரு துணியிலே பரப்பி வைத்து அதின் பேரில் பத்து சுருள்ளி செங்குள்ளி, வைத்து ஐந்து கிராம்புங் கூட வைத்து முடிந்து சாணியைப் பூசி கோழிப் புடத்தில் வைத்து மேல் சாணி வெந்ததின் பிறகு எடுத்து எருமைத் தயிர் விட்டு பச்சைக் கிரம்பு ஐந்து வைத் தரைத்து தயிரிலே குழப்பி சாப்பிடவும் தீரும்.

<u>பாரிச_வாய்வுக்கு</u>:-

கடுக்காய் ஒரு பலம் மேல் தோல் எடுத்து பசு நெய் போட்டு வறுத்து தின்று அந்த நெய்யுஞ் சாப்பிடவும். கடுக்காய் மேல் தோல் ஒரு பலமெடுத்து பசுவின் நெய்யிலே போட்டு வறுத்து தின்று அந்த நெய்யுஞ் சாப்பிட பாரிச வாய்வு தீரும்.

<u>மூல_வாய்வுக்கு</u>:-

(அரத்தை ஓமம், மிளகு தேசாவரம், ஏலம், அதிவிடையம், கார்போக அரிசி, குருசாணி ஓமம், கிரம்பு, கோஷ்டஞ் சீரகம் இந்துப்பு வகைக்கு பலம்.ல, பண்டு பலம், வெல்லம் பலம்.ரு, சாதிக்காய் விராகனிடை.கா மேற்கண்ட பத்திரி விராகனிடை.கா

<u>பச்சை_வாதத்துக்கு</u>:-

வேப்பெண்ணெ படி.க, அண்டத் தயிலம் பண்டுத தயிலம், இஞ்சிச் சாறு, எருக்கம் பூச் சாறு, வகைக்கு படி.3/8, தலை சுருளி அப்பைக் கிழங்கு குன்றிப் பட்டை, மயிலிற சாம்பல் அரத்தை கருஞ்சீரகம் வகைக்கு பலம்.க பொடி செய்து போட்டு பதமாய்க் காய்ச்சி ஒரு வேளைக்கு குட்டிடை வீதம் சாப்பிட்டு மேலுக்கு தடவவும். புளி, புகையாகா

<u>சன்னிக்கு</u>:-

சுக்கு அரத்தை கொட்டைப் பாக்கு சொருசா வேறு மாட்டியி உக்கிரமான வெத்தி லையில் உகந்து வைத்து மென்று முழுங்க கக்கும். பாரு சன்னி விட்டுக் காதமோடும். நில் லாமல் பக்குவத்தொடு தயிர் சாதம் பகர்ந்து உண்ண லகுவாமே.

<u>உஷ்ண_வாய்வுக்கு</u>:-

மிளகு, கிராம்பு, அரத்தை, ஓமம், சுக்குத் தோல் போக்கி சுண்ணம் போட்டுப் பிரட்டிக் காய்ந்த சட்டியில் போட்டு பற்பமான பிறகு தண்ணீர் விட்டெரிக்கிற போது நாலு கிராம்பு சும்மா போடுகிறது. மூன்று கிராம்பு தனி சுத்திப் போட்டு வீசம் படி இறக்கி இந்த எலு கிரம்பு அந்தக் கசாயம் விட்டரைத்து கொடுக்கத் தீரும்.

<u>சன்னி_விக்கலுக்கு</u>:-

எவட்சாரம் விராகனிடை.க, நவட்சாரம் விராகனிடை.க, கையாந்தகரைச் சாறு விட்டரைத்துத் தேனில் குழப்பிக் கொடுக்கவும். நல்ல மறு உபாருக்கு கண்டால் நரிப் பயத்தின் வேரும் மகிழம் வேரும் அரைத்து பசுவின் வெண்ணெயில் குழப்பிக் கொடுக்கவு

<u>ரத்த_மூலத்துக்கு</u>:-

வெறப்புலா சமூலமும் ஒரு நாக்கு காணக் கொண்டு வந்து நன்று இடித்து ஒரு பா தண்ணீரிலே போட்டுக் கசாயம் வைத்து இரண்டு படி தண்ணீரிறக்கி உமிக் காந்தலிலே வைத்து கொண்டு ஒரு போதைக்கு கால் படி களைக் கசாயத்தை இறுத்து அத்தோடே கிரம்பு, சாதிக்காய் கிராகபூப. இந்த மூன்று வகைக்கு கால் விராகனிடை வீதம் பொடி செய்து

கசாயத்தில் கலந்து கொடுக்கவும். இந்தப்படி இரண்டு வேளையும் கொடுத்து வரவும்.

<u>உருக்கு வெட்டுக்கு</u>:-

வெள்ளைக் குங்கிலியம் பளிங்கிலே மூன்று பலத் தூளும் சீரகம் பலம். 1½, சிறுநாகப்பூ பலம்.ய. சன்ன லவங்கப் பட்டை பலம்.½, ஆக சரக்கு நான்கையும் பொடி செய்து கால் படி பசுவின் நெய்யிலே இந்தத் தூளைப் போட்டு நெய்ச் சட்டியிலே காய்ச்சி எழு நாழிகையான பிறகு ஒரு பெருஞ் சட்டி மேலே வேடு கட்டி அந்தச் சட்டிக் குள்ளாக இருந்த தண்ணீரில் மேலே வழுந்திருக்கிற நெய் மெழுகை கையிலே பிசைந்து பிசைந்து எடு திரள் சட்டி மாத்திரை பிறகு அது வெண்ணெயாகும். அந்த வெண்ணெயை ஒரு சட்டி தண்ணீரிலே போட்டு வைத்துக் கொள்ளவும். இச்சா பத்தியம்.

<u>உப்பிசத்துக்கு</u>:-

அரைப் பாலில் இரண்டு பலம் பூண்டு காணப் போட்டுக் காய்ச்சிக் கடைந்து குழம்பானதின் பிறகு இறக்கிக் கொடுக்கத் தீரும்.

ஊறல்:- விற மருட்சதி மலர் விராகனிடை.ய, சாதிக்காய் விராகனிடை.க, பத்திரி விராகனிடை.க, கிராம்பு விராகனிடை.க, சுக்கு விராகனிடை.க, நாட்டுச் சர்க்கரை விராகனிடை.உ எல்லாங் கூட்டிச் சாப்பிட்டால் படமேறல் வாங்கும்.

<u>கிரிக்கு</u>:-

கருவேலம் பட்டை வேர், விலை பிஞ்சு காய் கொண்டுவந்து தயிர் விட்டரைத்துக் கொடுக்கவும்.

மண்டைக் குத்தலுக்கு:- நல்லெண்ணெய் படி.½, ஆட்டுப் பால் படி.½, மிளகு பலம்.½, வெள்ளைச் சாறணை வேர் பலம்.க, வெள்ளறுகு வேர்.உ, எரித்து முழுகவும். காதில் சீ வழுந்தால் எருக்கிலைப் பழுப்பை வாட்டிக் காதில் பிழியவும்.

பீனிசத்துக்கு:- நல்லெண்ணெய் படி.க, வெண் நொச்சிச் சாறு படி.¼, வெள் சாறணை படி.வ, ஆட்டுப் பால் படி.க, அதிமதுரம் பலம்.க, நன்னாரி வேர் பலம்.½ மிளகு பலம்.½, சீரகம் பலம்.ங, விரலி மஞ்சள் பலம்.½, இது சரக்கையும் ஆட்டுப் பால் விட்டரைத்து எண்ணெய் பச்சைச் சாறெல்லாங் கலந்து ஒரு நாள் வெய்யிலில் வைத்து ம நாள் காய்ச்சி க்தாவம் பண்ணவும்.

வாதப் பிடிப்புத் தயிலம்:- வாத மடக்கிப் பட்டை வாகைப் பட்டை பூவரசம் பட்டை வெம்பாடம் பட்டை, பூத கரப்பான் பட்டை, செங்கத்தாரிப் பட்டை, முருங்கைப் பட்டை, மாவிலிங்கம் பட்டை, வேளைப் பட்டை, அமுக்கிறாக் கிழங்கு வேளை வேர் சங்கம் வேர், ஆடாதோடை வேர் முசுமுசுக்கை வேர், கோவை வேர், நாயுருவி கொடிவேலி, சிறு செருப்படி திருகு கள்ளி கொடிக் கள்ளி வட்டக் கிலுகிலுப்பை, வெள் சாறணை வெண்ணொச்சி வெள்ளிறகு கருநொச்சி, பிரமி தலைசுருளி, கையாந்த கர கனச்சி யிலை, காஞ்சொறி, முடக் கொத்தான் வேலிப் பருத்தி எருக்கம் பூ, அவரி வேர் வகைக்கு படி.¼, பறங்கிப் பட்டை பலம்.வ, சித்தரத்தை பலம்.வ, வால் மிளகு பலம்.1/8, பிரப்பங் கிழங்கு பலம்.1/8, பூண்டு பலம்.½, கஸ்தூரி மஞ்சள், கருஞ்சீரகம் வசம்பு பலம்.½, சுக்கு பலம்.1/16, கடுக்காய் பலம்.1/16, வேப்பெண்ணெய் படி.க, புங்கெண்ணெய் படி.½, (இது முடிவு இல்லை)

<u>கண்ணீர் விழுகிறதுக்கு</u>:-

புளை வேரில் காடி விட்டிடித்து சாறு வாங்கி சமன் நல்லெண்ணெய் விட்டுக் காய்ச்சி முழுகவும்.

காசத்துக்கு:- வெண்ணொச்சிக் கொழுந்து மிளகு, பூண்டு அரைத்து களச்சியளவு மூன்று பொழுது கொடுக்கவும். கள்ளிக் கொழுந்து.எ, மிளகு.எ, வெற்றிலையில் சுருட்டிக் கொடுக்கவும். உப்பாகாது.

<u>கண்ணீர் விழுகிறதுக்கு</u>:-

<u>கண்ணீர் விழுகிறதுக்கு:-</u>

மிளகு பலம்.வ, சடாமாஞ்சி பலம்.ரு வாங்கிக் கொண்டு மேற்கண்ட மிளகை ஒன்று ரெண்டா உடைத்து அரிசியிலே வைத்து அதுக்குள்ளாக மாஞ்சியை வைத்து மூடிந்து ஒரு ப படி நல்லெண்ணெயில் விட்டு ஆறு நாள் பூமியில் புதைத்து ஏழா நாளெடுத்து ஒன்று விட்டொரு நாள் ஸ்நானம் பண்ணவும்.

<u>வீர மெழுகு:-</u>

வீரம் விராகனிடை.ரு லிங்கம் விராகனிடை.ரு ரச கற்பூரம் விராகனிடை.ரு, ரச செந்தூரம் விராகனிடை.க, கெந்தி விராகனிடை.ரு வாலம் விராகனிடை.க மூலைப் பாலில் ஒரு நாள் முழுவதும் வீரத்தை ஊறப் போட்டு இது வெல்லாம் நன்றா அரைத்து மெழுகாகும். காவிக் கல்லும் ஓமமும் நன்று அரைத்து மெழுகாகும். வில்லை செய்து உணர்த்தி புடம் போட்டுஅந்த வில்லை ஒன்றை எடுத்து தண்ணீரில் காய்ச்சிக் கொடுக்கவும் தாகந் தெளியும். பிசகில்லை.

நீர் முள்ளி விரை, பூனைக் காலி விரை, நிலப் பனைக் கிழங்கு, சீனி சர்க்கரை வகைக்கு பலம்.ந், அத்திப் பால் விட்டரைத்து எட்டு நாளைக்கு அந்தி சந்தி சாப்பிடவும். பதினாறு நாளைக்கு ஸ்திரீபோகமாகாது. லேபனம் உண்டாகும்.

<u>மண்டைக் கரப்பான் சீ விழுகிறது குத்தல் காதுகிறதுக்கு:-</u>

நல்லெண்ணை ஊமத்தை இலைச் சாறு வசம்பு பூண்டு எரித்துக் குத்தவும்.
இதுவும்:- விளக்கெண்ணை வலம்புரிக்காய், ஈர வெங்காயம், பூண்டு வசம்பு நசுக்கிக் காய்ச்சிக் குத்தவும்.
வெள்ளைக்கு:- நல்லெண்ணை சீருள்ளிச் சாறு சமன் சேர்த்து மூன்று பொழுது குடிக்கவும். வில்வ இலைச் சாறு பால் படி சமன் கொடுக்கவும்.

<u>அண்ட வாதத்துக்கு:-</u>

கொச்சி பருப்பு விரலி மஞ்சள் சுக்கு மூன்றும் புடம் வைத்துச் சாம்பலெடுத்துக் கூட ஓட்டடை கலந்து தேத்தாங் கொட்டை அளவு அந்தி சந்தி சாப்பிடவும். நல்ல வெல்லமுங் கூடப் போட்டுக் கொள்ளவும். மருந்து தீர்கிற வரைக்கும் ஸ்நானமாகாது.

<u>விக்கல்:-</u>

மாதளையோடு நெற் பொரி சர்க்கரை திப்பிலித் தாளி தேன், தாம்பிர செந்தூர மாத்திரை, ஆடுதீண்டான் பாளை வெண்தெச்சி இது வேரு எருக்கம் பால் விட்டரைத்து எலுமிச்சங் காயளவு கவசஞ் சாத்தி காயப் போட்டு அகலில் வைத்து மூடிச சீலை மண் செய்து புடம்.

<u>இருமலுக்கு:-</u>

தூதுவளையிலையும், மிளகும் அண்டிச் சாப்பிடவும். அப்பால் மேற்கண்ட கொடியும் திப்பிலியும், சுக்குங் கசாயம் வைத்து மூன்று பொழுது சாப்பிடவம். அப்பால் மேற்கண்ட கொடி முதல் உணர்த்தி இடித்து வடிகட்டி திப்பிலியு மிடித்து பொடி பண்ணிக் கலந்து மூன்று விரல் கொண்டது தேனில் மத்திச்சு அந்தி சந்தி சாப்பிடவும்.

<u>பீனிசத் தலை வலிக்கு:-</u>

ஆதண்டை வேர்ப் பட்டை, மாகறளைப் பட்டை வகைக்கு பலம்.உ, ஆயில் பட்டை உசிலம் பட்டை, மிளகு, சீரகம் இது வகைக்கு பலம்.க பால் விட்டரைத்துப் போடுகிறது

<u>சீதம் ரெத்தம் காணுகிறதுக்கு:-</u>

கடுக்காய்த் தோல் நறுக்கி வெண்ணெயில் குழப்பிக் கொடுக்கவும்.
இதுவும். உப்பிசம் உழலை சுரத்துக்கு:- கத்தாளஞ் சருகு, களிப் பாக்கு, கடுக்காய், கடுகு ரோகணியும் மத்தார் சிவதை இந்துப்பு, வளநத் சீந்தி தண்டுடனே கொத்தார் சுக்கு வாய் விளங்கம் கூட்டி இடித்து சமனாக ஒத்தார் ஒரு பிடி கசாயமிட உப்பிசம் உழலை சுரம் போமே.

<u>இருமல் வாய்வு:-</u>

இஞ்சி பலம்.உ, சீரகம் பலம்.உ, ராஜபுரிச் சர்க்கரை பலம்.உ, மேற்கண்ட இஞ்சியைச் சீவி அரைத்து நன்றாய் வறுத்து அம்மியில் வைத்து சீரகமும் வறுத்துக் கூடப் போட்டு அரைத்துச் சர்க்கரையுஞ் சேர்த்தரைத்து வேளைக்கு பின்னைக் காயளவு சாப்பிடவும்.

மிளகு தயிலம்:- நாலு பலம் மிளகு போட்டு ஒரு படி கசாயமா இறக்கி கையாந்தகரைச் சாறு படி.உ, எலம் விராகனிடை.அ, இந்த மூன்று வகையுங் கூட்டி எரித்து முறுகவும்.

லேபனம்:- தாதுவளம் பூவு படி.உ, முருங்கைப் பூவு படி.உ, நெருஞ்சிப் பூவு பலம்.க, பால் பதக்கு இந்தப் பாலிலே மூன்று வகைப் பூவும் போட்டு அவித்து வெந்த பிறகு மத்துப் போட்டுக் கடைந்து எலம் பலம்.க, நிலப் பனைக் கிழங்கு பலம்.க, அதிமதுரம் பலம்.உ, நன்னாரி வேர் பலம்.உ, சதாவேரி பலம்.க, வகை ஐந்தும் வறுத்துப் பொடி பண்ணி மேல் பாலிலே கொட்டி சர்க்கரை பலம்.ய தேன் பலம்.ரு, நெய் பலம்.ய கூட விட்டுக் கிளறி அந்தி சந்தி வெருகடி பிரமாணம் கால் மண்டலஞ் சாப்பிடவும். புளி, புகையாகாது.

<u>குஷ்டம்:-</u>

முக்கதாரி வேர் பட்டை பலம்.ரு, சங்கம் வேர் பட்டை, பூவரசம் பட்டை, வேப்பம் பட்டை, அகவ கெந்தி, சிவனார் வேம்பு, தாளைக் கிழங்கு, புங்கம் வேர்ப் பட்டை, வெள்ளறுகு நெல்லிக்காய், கெந்தி வகைக்கு பலம்.ரு, ரசம் பலம்.உ, கொப்பரை.உ, பனை வெல்லம் பலம்.ய, ஆக வகைக்கு விரம் கெந்தி வகை இரண்டும் ரசமுங் கூட்டி அரைத்து வில்லை பண்ணி ஓட்டில் வைத்து மேலோடு மூடி சீலை மண் செய்து ஒட்டடை செங்கல் பொடி, சுண்ணம், மஞ்சள் பொடி, சோறு வறளிப் பொடி ஆக வகையும் அரைத்து மேல் கவசங் கட்டி சீலை மண் செய்து புடம் போட்டுக் கொண்டு மற்ற பட்டை வகையும் பொடி செய்து கொப்பரையும் போட்டிடித்து பொடியில் கொட்டி பற்பம் போட்டு வெல்லத்தைக் கூட்டி இடித்துக் கொண்டு தேங்காய்ப் பால் கொதிக்கிற போது இது வெல்லாம் போட்டுக் கிளறிக் கொள்ளவும். தலை சுருளிக் கொடியை இடித்துக் கசாயம் போட்டு அந்தப் பானையின் பேரில் வேடு கட்டி மேற்கண்ட வேர் பட்டை கொல்லன் கோவைக் கிழங்கு சமனிடித்து வடிகட்டி வேட்டின் பேரில் வைத்து சட்டி மூடி சீலை மண் செய்து வெந்த பிறகெடுத்து அதுக் கிசையக் கருநெல்லி, சிவனார் வேம்பு, வெவ்வேறே தயிலஞ் செய்து லேகியமாய் வைத்துக் கொண்டு வேளைக்கு பின்னைக் காயளவு சாப்பிடவும். புளி, புகை வாய்வு பதார்த்தமாகாது. தாளக மனோசிலை, கெந்தி, ரசம் வகைக்கு விராகனிடை.உ, ஆறு மாத்தைக் காடி விட்டரைத்து அனியில் பரப்பி இருப்புக் கருவில் சுத்திக் கொளுத்தி அதின் பேரில் அரைப்படி நல்லெண்ணையை சிறு கரண்டியால் கொஞ்சம் கொஞ்சமாய் விட்டு தயிலம் வாங்கி சன்விக்கு உள் கொடுக்கவும்.

மாந்தங் கண்டால்:- வெள்ளைக் கரு வாங்கி மூன்று காலமே கொடுத்து மூன்று நாள் பத்தியம் மஞ்சள், கரு தயிலம் சுவளையிடவும். பிசகில்லை.

<u>மேக நீர் தலை சொட்டு விழுகிறதுக்கு:-</u>

ஒரு விராகனிடை அபினி காடித் தண்ணீரில் கால் படியில் கரைத்து அரைப்படி நல்லெண்ணெயில் விட்டுக் காய்ச்சி முழுகவும்.

<u>தேத்தான் வரை நெய்:-</u>

சுக்கு, திப்பிலி, மிளகு, தாளிக்காய், மல்லி, சாதிபத்திரி, லவங்கப் பத்திரி, தாளிச பத்திரி, சன்ன லவங்கம், முந்திரிப் பழம், கருஞ்சீரகம், அதிமதுரம், நன்னாரி வேர், செண்பகப்பூ, சிறு நாகப்பூ, குங்குமப் பூ, கிராம்பு, வால் மிளகு, சித்தரத்தை, சீரகம், கசகசா, ஓமம், கோஷ்டம் வகைக்கு பலம்.வ, தேத்தான் விரை பலம்.ங இளநீரில் ஊறப் போட்டு ஆவின் பால் விட்டாட்டி நெய் படி.வ, விட்டுக்

கிளறி தண்ணீர் கண்டச் கண்ட மேற்கண்ட சாள்களைப் போட்டு எரித்து ரேசித்து வருகும். போது தேன் வீசம் படியும் கற்கண்டு பலம்.உ, நறுக்கி ஒன்போக் கிளறி மெழுகு பதத் திறக்கி அந்தி சந்தி சாப்பிடச் ஒரு வெட்டை வாய்வு தீரும். இச்சா பத்தியம்.

பேதி நிற்க:- 24.8.63.

வேம்புப் பருப்பு பொன் முசட்டை, வசம்பு, சுக்கு, ஓமம், ஐந்தும் சட்டியில் சாம்பலாக்கி ஒரு படி தண்ணீர் விட்டு வீசம் படி கொடுக்கவும்.

குழம்பு:-

ரசம், கெந்தி, நீர் விஷம், நாபி, அரிதாரம், லிங்கம், மனோசிலை, காயம் ஓமம், வெங்காரம், ஏலம், கிராம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, கடுகு வேளை கருகு கார்போகரிசி, கடுக்காய், நெல்லிக்காய், கருஞ்சீரகம், பச்சைராட்சம், கடுகு ரோகணி, வகைக்கு விராகனிடை.ஐ.அ, வகை சுத்தி இல் வறுப்பு வாயம் ஒரு போக்கி சதிராக முளையிலையும் தள்ளி நவ சுத்தி செய்து கொண்டு விளங்கு முன் மருந்துக்கு சமன் தாக்கி பாதி வறுத்து பாதி பச்சை சேர்த்துக் கொள் கிறது. நவ சுத்தியாவது, சாலிப் பாலிடி நப் போட்டு மூளையைத் தள்ளி தண்ணீரிலே ஏழு தரம் கழுவிப் பசுவின் பாலில் அவிச்சுப் போடுகிறது. இந்தப் படி நவ சுத்தி செய்த சரக்கில் சேர்க்கவும்.

வாய்வுக்கு:-

சூரிய காந்தியிலை, மனத் தக்காளி யிலை அரைத்து விழுது எடுத்துக் கொண்டு இஞ்சிச் சாற்றில் வெள்ளாட்டின் பாலைக் கலந்து அதில் விழுதைக் கலக்கி, பசுவின் நெய் சட்டியில் வார்த்து அடுப்பேத்திக் கொதிக்க வைத்து இந்தக் குழம்பை விட்டுக் கிளறிச் சாதிக்காய்.உ, இரும்பு பலம்.¼, ஏலம் பலம்.¼, வால் மிளகு பலம்.ஐ, மிளகு பலம் ¼, திப்பிலி பலம்.¼, சாதி பத்திரி பலம்.¼, கசகசா பலம்.¼, அதிமதுரம் பலம்.¼ இவ வறுப்பாய் வைத்து பொடி பண்ணிப் பாகத்தில் போட்டுக் கிளறிக் கொள்ளவும். கலைமான் கொம்பு விழுது பலம்.௧ வெள்ளை பலம், அவிச்ச வாழைப் பழம்.௧, தேத்தான் வித்து வறு போட்டரைத்த விழுது பலம்.௧, சேத்து மூன்று நாள் அந்தி சாப்பிடவும். கருவாடு, மீன், மிளகாயாகாது. நெய் கூட்டி வரவும்.

மூலக் கடுப்புக்கு:-

வெந்தயம், கருவேப்பிலை, சீரகம், மிளகு, வெங்காயம், நெய்யில் வெங்காயத்தை அரிந்து போட்டு வெந்த பிறகு பொடி பண்ணி அந்தி சந்தி சாப்பிடவும். அன்னுடகம் செய்து சாப்பிடவும்.

பச்சைக் கெந்தி வாய்வு, பாரிச வாய்வு:-

ஒன்று மணிப் பருப்பு, பலம்: பேராமுட்டி பலம்.௩, சிற்றா முட்டி பலம்.௩ சித்தரத்தை பலம்.௩, பாண்டத்திலிட்டு நாலு படி தண்ணீர் விட்டு அரைப்படியாக் காய்ச்சி முன் ஒன்றிப் பருப்பை இந்தக் கசாயம் விட்டரைத்து தலையை போடவும். உள்ளுக்கு உத்தாமணிச் சாறிஞ்சிச் சாறு இரண்டுஞ் சுரசம் பண்ணி புன்குத் தைலம், கழுதைப் பால், தேன் இது மூன்றும் சுரசத்தில் கலந்து கொடுக்கவும். ராத்திரிக்கு வேப்பம் பட்டை, மிளகு போட்டுக் கசாயம் கொடுக்கவும். உப்பு வைத்துக் கொள்ளவும்.

(வேறு) வால் மிளகு, ஓமம் காயம், வசம்பிடன், லவணமஞ்சம், சாலவாய் விளங்கம் வெள்ளைச் சாறனை சாரம் நாலும் கோலமா முக்கா வேளை கொடிவேலி சாதிக் காயும், சீலமாத் செவியத்தோடு திரிகடுகுடன் சொல்வேனே.

சொல்லுந் திப்பிலியின் மூல சுகிர்த சீரகத்தினோடு அல்லி மரத்தின் மஞ்சள் அடர் கருஞ் சீரகத்தோடு செல்லு மோர் நிறையாய்க் கட்டி சிறிதுடன் வாட்டலாக்கி நல்ல தோர் பழச் சார் விட்டு நன் களச்சிக் காயிடே. யீடெறும் உண்டை செய்து நிறு பொழுதசை மேற் கொள்ள ஆடிய பக்க வாய்வு ஆசீரணம் அமை சூலை நாடு வாந்தி களினோடு நடு நெஞ்சு வலிவு மேகும்.

நாபி, மேகச் சூடு வாய்வு பேதிக்கு:-

கருநாபி விராகனிடை. 2½, கிராம்பு விராகனிடை. ரு, சிறுகீரைச் சாறு விட்டு அரைத்து மாத்திரை பாசிப் பயறு அளவு உருண்டை.

நாபி விராகனிடை. கஉ, மிளகு விராகனிடை. ய, தண்ணீர் விட்டரைத்து பசுவின் பாலில் பூண்டு வேக வைத்து மத்துப் போட்டுக் கடைந்து சாதிக்காய், சாதிபத்திரி, கிராம், சன்ன லவங்கப் பட்டை தேன் மூன்றும் விட்டுக் கிளறி அந்தி சந்தி சாப்பிடவும்.

குழம்பு:-

சாதிலிங்கம், வெண்காரம் இரண்டு பங்கு தக்கா மணக்கு, மூத்து நாலு பங்கு, ஒதியதோர் நேர்வாளம் எட்டுப் பங்குடன் அரைத்துக் குன்றி பொருட்டிக் கொண்டு பேதிக்குப் பச்சைத் தண்ணீர், பேதி அதிகமானால் வெந்நீரில் நெய் போட்டுக் கொடுக்கவும்.

விக்கல் அடைக்கல்லுக்கு:-

மாதளை நெல்ப் பொரி சர்க்கரை திப்பிலி தேனில் குழைத்துண்ணவும். பெரிய சாதிக்காய் வாங்கித் திருவி மாவெடுத்து குடுக்கை செய்து அதக்குள்ளே ஆனைப் பால் நிறைய விட்டு மேற்கண்ட சானை வாய் மூடி குருவி வயத்துக்குள்ளே போட்டு மூடி உருந்த மாவரைத்து அதின் மேல் பொதிந்து நெய்யில் சுட்டெடுத்து உடைத்து அம்மியில் நகத்தி உண்டை. செய்து சீனி சர்க்கரை பாவு காய்ச்சி அதில் போட்டு ஒப்பறவாக எடுத்துக் கொள்ளவும்.

கணை எண்ணை:-

செண்பகப் பூ பலம். ய, சாதிப் பத்திரி பலம். க, கோரோசனை பலம். ரு விளக்கெண்ணை படி. மருந்தை நசுக்கி எண்ணையில் போட்டுக் கொதிக்க வைத்தி றக்கிறது.

குதுவாக:- மஞ்சளும் புளியும் சமன் சேர்த்துக் கொடுக்கவும்.

வலிப்பு:- மலைக் கிருவை சமன் சேர்த்துக கொடுக்கவும்.

வலிப்பு:- மலைக் கிருவைக் கொம்பு சந்தனக் கல்லில் வெள்ளாட்டுப் பால் விட்டிழைத்து பின்னைக் காயளவு மேற்கண்ட பாலில் கரைத்துச் சாப்பிடவும்.

கலிக்கம்:-

எலுமிச்சம் பழத்தில் பக்கத்துப் பக்கம் நாலு புறமும் கிரும்பு சொருகி வெண்ணை கொண்டு கவசங் கட்டி தண்ணீரில் போட்டு மறு சட்டி நாளுக்கு நாள் மாற்றி தண்ணீர் விட்டு இந்தப் படி ஒரு மண்டலந் தண்ணீரில் போட்டு கவசங் கட்டின வெண்ணையை செப்புச் சிமிழிலடைத்துக் கலிக்கமிடவும்.

வீனி வெண்ணை:-

போச்சப்பா வீனி வெண்ணை வடிக்கக் கேளு புகழாக ஓர் படியாம் எரண்டத் தெண்ணை
வாச்சப்பா நறு நெய்தான் படி தானென்ற வனமான வீனிச் சார் படி ரெண்டாக
கூஞ்சப்பா திரிகடுகு வசம்பீருள்ளி கோடை மிலவங்கம் வெள்ளுள்ளி ஏலம்
காச்சப்பா வகை யொன்று பலங் கால் வீதம் கட்டாகப் பதந் தனிலே வடித்தாக் கொள்ளே.

இந்த எண்ணை உள் கொள்ள கெற்ப வாய்வுஞ் சகலமுந் தீர்ந்து ஆயுசுண்டாம்

சிரசூலைக்கு எண்ணை:-

பாரப்பா சிரசிலுள்ள சூலை தீரப் பக்குவமாய்த் தயிலமொன்று சொல்லக் கேளு
நேரப்பா ஆதண்டை நொச்சி சங்கு நிலவாகை எருக்கு சித்தாமுட்டி
ஆரப்பா வகை யொன்று பலம் பத்தாகும் அப்பனே சாவி நீரெட்டொன்று பலம் பத்தாகும்
காரப்பா எருக்கிலை பழுப்புச் சாறு கருவாகப் படியொன்று பச் சாறுன்றே
ஒன்றப்பா எளிவெண்ணை படி தானென்று,

உக்கமனே வேப்பெண்ணை படி மரைதான் கட்டி, நன்றப்பா திரிகடுகு, ஓமம் பூண்டு நல்மான வசம்பு மஞ்சள் பலந்தான் கட்டி கன்றப்பா அரைத்து எண்ணை தனில் கலந்து கருவாக மெழுகு பதந் தனில் வடித்து முன்றப்பா முழுகி வரத் தீரும் நோய்கள் முதலான சிரசிலுள்ள நோய் போமே. மூலை போம்; வாய்வெல்லாஞ் சொல்லாதோடும். சுருக்கான வாதத்தில் மூலை தீரும். வாலையாந் திமிர் வாதம் விறைப்புத் தீரும். வயத்திலுள்ள வாயுவெல்லாம் வாங்கிப் போகும். சோலை போம். சிவ ருத்தல் முன்வல் போகும். சொறி சிரங்கு கரப்பானெடு ரிணங்கள் தீரும். மூலை பிறப்பத்தியத்தில் புளி, கசப்பு அப்பவே புகை வாய்வு பதார்த்தந் தள்ளே.

<u>பக்த வாய்வு முத்தருக்கு:-</u>

மிளகு பல ம்.ச, ஆரைக்கால் படி நெய்யில் வறுத்து நசுக்கி பனைக் கற்கண்டு பலம்.க, சுட்டிக் கலசத்தில் வைத்துக் கொண்டு அந்தி சந்தி சாப்பிடவும்.

இரவும்:- நாவறட்சிக்கு:- திருநீற்று பச்சை விதை கொண்டு வந்து தேய்ச்சுப் புடைச்சு புதுக் கலசத்திலே போட்டு தண்ணீர் விட்டு ராவு முழுவதும் ஊற வைத்து காலமே இரண்டு வேளையும் சாப்பிடவும்.

<u>வெறுப்புக்கு:-</u>

செம்நாயுருவி சமூலமுங் காய வைத்து சுட்டு பற்பமாக்கித் தேனில் கொள்ளவும்.

<u>மேக அனல் சூட்டுக்கு:-</u>

மிளகளவு விழுதியிலை சமூலமும் தேசி நீரில் கசாயம் வைத்து பதம் பார்த்து இலையைப் பிசைந்து எடுத்துப் போட்டு அந்தக் கசாயத்தைக் காய்ச்சி மெழுகு பதத்தி இறக்கி அந்தி சந்தி சாப்பிடவும். புளி, புகை ஆகாது.

<u>ரத்த மூலம்:-</u>

ஒரு பலம் காசுக் கட்டி வாங்கி வந்து நசுக்கி கோழி முட்டை வெண் கருவு கரண்டியில் விட்டு மேற்கண்ட சூரு போட்டு அடி பத்தாமல் கிண்டிச் சாப்பிடவும்.

<u>சகல உன்மத்தத்துக்கு:-</u>

கோழிமுட்டை வேக வைத்து ஓடெடுத்துப் போட்டு அதின் பேரில் கொத்தமல்லி கல்லுப்பு சமன் கொண்டு நன்று அரைத்து கலசங் கொடுத்து ராத்திரி முழுவதும் பனியில் வைத்துக் காலமே சாப்பிடவும். நீராகாரத்தில் கதிக்க உப்பு போட்டுக் கலக்கிச் சாப்பி டவும். பத்தியம் புளி, புகை ஆகாது. பழையதாகாது. பெரிய மனுஷருக்கு மேற்கண்ட கருவில் சீனி சர்க்கரை போட்டுப் பிசைந்து காலமே காலமே கொடுக்கவும். பத்தியம் இச்சா பத்தியம்.

<u>மேகத்தின் பேரிலெழுந்த வெட்டைக்கு:-</u>

ஒரு பலம் பறங்கிப் பட்டையை நசுக்கி வடிகட்டி அரைக்கால் படி விளக்கெண்ணை யில் போட்டுக் குழைத்து அத்தோடே சுட்டிடை கோவைச் சார் விட்டு சுடச் சுடக் கொஞ்சம் வெந்நீர் விட்டு கலக்கி காலமே சாப்பிடவும். மூன்று நாள் பத்தியம். நாலா நாள் ஸ்நானம் பண்ணி கோழிக் குழம்பு நீரிறுத்து அதில் நல்லெண்ணை விட்டுச் சாப்பிடவும். மறுபடி சாதம் சாப்பிடவும். வஸ்திர காயமாம்.

<u>சொறு சன்னி, சனிச் சூட்டுக்கு எண்ணை:-</u>

வீசம் படி எருக்கம் பாலில் மாத்து விட்டு முறித்து உள்ளுக்கு கொடுத்து தயிருஞ் சாதமும் கொடுக்கவும். ஆமணக்கு நீர் நாளி ஆவ பசும் பால் நாளி தாமணக்கெண் கால் கறவி தானெரு கால் நெல்லியின் சார், பூ மணக்கும் வேர் காந்தி பொற் சனசி துாதவளை சமமாகவே சேர்த்து தண்ணீரும் விட்டரையே;

இள நீர் தனிவித்த எண்ணையிலே தானும் விட்டு மழை நீர்தனைச் சண்ட மின்னவனே தானெரித்து கிளறு மின சனுமே. கோருங் இடித்திறங்க களையாகப் பேதி

விடியக் காலமே தானுறும், ஊறும் இருமல் கபம் அஸ்தி சுரம், உள்க் காச்சல்
வாயுபடவே, கருப்பு வறக் கனவு நீல கனம், பாகு மொழி மயிலே பாரித்தியாந் தீரு
மென்று தோகையுமையாள் பாகன் சொன்னார் முனிவோர்க்கே.

கரும்பு:-

தாளகம் பொடி பண்ணி நல்லெண்ணெயில் போட்டு எரிக்கப் பற்றிக் கொள்ளும். அப்பால் பச்சைத் தண்ணீரில் சாய்த்து திருப்பி எடுத்துப் புன்னைக்குப் போடவும். அதின் மேல் நல்லெண்ணெயும் மாவிலிங்கைச் சாறும் சமன் சேர்த்து சூரிய புடம் வைத்து போடவும்.

விஷ பாண்டுக்கு:-

வெள்ளை சாறணை வேர், கொடிவேலி வேர், வெங்காரம், இந்துப்பு, வாளம், கள்ளிப் பால் சரி எடையாய் நிறுத்து இதுக்குச் சரி விளக்கெண்ணெய் சுட்டி கட்ட மருந்து அரைத்து பால வெண்ணெயுங் கலந்து மெழுகு பதத்தில் காய்ச்சி இறக்கி. . . . எ. நாள் ஒரு காலமே கொடுக்கவும். உப்பில்லாமல் மோருஞ் சோறுங் கொடுக்கவும்.
பேதி அதிகமானால் சிறுகீரை வேருஞ் சாதிக்காயும் கஷாயம் போட்டுக் கொடுக்கவும்.

காமாலைக்கு:- கரிசாலை செருப்படி மேனி குரலம் பண்ணி தேனில் கொள்ளவும்.
வெள்ளைக்கு:- இலந்தை வேர்ப் பட்டையை அரைத்து பாலில் குழப்பி ஐந்து நாள் அந்தி சந்தி சாப்பிடவும். பத்தியம் பாலுஞ் சோறும் சாப்பிடவும். நாவல் பட்டை அரைத்து பாலில் குழப்பிக் காலமே கொடுக்கவும். சாயந்திரம் மாசிக்காயரைத்து மோரில் ஒத்தி சாப்பிடவும். அதிகமான நீர்க் கட்டும்.

மேகத்துக்கு:-

மாசம் ஒன்றுக்கு இரண்டு தினம் காட்டாமணக்குச் சாறுக்கில் பழச்சார் விட்டு உள்ளுக்கு கொடுக்கவும் பேதியாகும். மேக முதல் வாங்கிப் போகும்.
மேக மதிகமாய் மேலெங்குந் தடித்தால் நாய் முன்னி வேர்ப் பட்டை அரைத்துப் பாலில் தன் குழப்பி ஐந்து நாள் காலமே சாப்பிடவும். பத்து நாள் உப்பில்லை. பதினொரும் நாள் காலைதோறும் சாதிக்காய்க்கு பச்சைத் தண்ணீரில் அவித்து உப்புக் கூட்டவும். இந்தப் படிக்கு நாலு தடவை சாப்பிட்டு பத்தியம் கொள்ளச் சரீர சுத்தியாகும். கை கண்டது.

மேகத் தென்னை:-

சித்தா மணக்கு கொட்டை, சீந்தி தண்டு இடித்து ஒரு பானையில் போட்டு தண்ணீர் விட்டுக் கலக்கின பானையில் மேற்கண்ட கொட்டை நாழிபடி போட்டு மூன்று நாளூற வைத்து நாலா நாள் காய வைத்து எண்ணெய் வடித்து சமன் பால் விட்டு எண்ணெய் படி. 1½, தென்னங் குரும்பைச் சாறு படி.ஞ, விட்டுக் காய்ச்சி வடித்து ஒரு ஆட்டைக்கு விதம் இரண்டு வேளையுஞ் சாப்பிடவும். பத்தியம் புளி, புகையாகாது.

குக்கிலாதி வடகம்:-

1. குக்கிலாதி வடகம்ப்பா கறக் கேளு கூறிய குக்கிலோர் களஞ்சி மூன்று
   முக்கியமாம் நல்லதொரு பறங்கிப் பட்டை முக் களஞ்சி ரசங் களஞ்சி கூகை நீறு
   தக்கிலாதொரு களஞ்சி யிலவங்கப் பட்டை தாமொரு களஞ்சி கருங்குங்கிலியம்
   பிக்கிலாப் பவே வெல்ல மோர் களஞ்சக் கப்பால் பலத்த நாவி கெவுரி பாஷாண மூன்றே.
2. மூன்று வகைக் கொவ்வொன்று களஞ்சு கூட்டு முறையோடே யிதுபாகலிலை தன்னையப்பா
   யென்றதொரு பிடி தன்னைச் சலமோடு கஷாய மிதில் மருந்து மூன்றுமொரு கிரி சுவாநுதிரமா
   யன்ற வகை வேக வைத்தால் சுத்தியாக்க வொன்பது தான் வகை மருந்த வுரலில் போட்டு
   போன்ற பின்பு நொச்சியிட கொழுந்து களஞ்சு மூன்று போட்டதிலே குருந்த சலம் விட்டு நன்றுய் யிடித்திடாயே.

3. பிடித்த மருந்தெல்லாந் தான் நன்றாய்ச் சேர வீரம் விட்டு மாம் படு மிடித்த பின்பு அப்பா
படித்திடாக் கறியுப்பு பழம் புளி மெளிதாய் வகைக்கு வொரு களஞ்சிட்டு கூட்டு கூட்டு
நடித்திடா சிறந்த பதமிருகத் தானே. கூட்டடா கூழ்ந்த சலம் தெளித்திடக்கச் சேரும்
படித்தாம் விடாமலே கடிகை தொன்னூ நாம் பதியவே பிடிப்பதுதல் பாக்காகும் பாகே

4. பாக்கான பதமப்பா. மயிர் கூர்த்தப் போலாம் பக்குவத்தில் கல்லடைச்சாய்ப் பிரமா முருங்கை
தேங்காமல் குளிகை கட்டி நிழலுலத்தி சிறியதொரு புதக் கலத்திட்டாறிப் போலே
நீங்காமல் தலை முழுகிப் பேதிக்கு வாங்கி நேயமுடன் மூன்று நாளந்தி சந்தி யப்பா
வாங்காமலேமுறைப் போலிரண்டு உருண்டை வாகாகப் பனை வெல்லம் பொதிந்தருந்து மருந்தே.

5. மருந்தருந்து மேமுறை நாள்க்கப்பாலோர் நாள் தான் மருந்து விடு மொன்பதா நாள் தலை மொழுகு
பொருந்த தல்லாய் நல்லெண்ணை யொன்றை விட்டு ஒரு நாள் புகழ் பெறவே. பதினெட்டு முழுக்கு முழுகப்பா
விருந்தாக நோய்களெல்லாம் பறந்தோடிப் போகும் விபரமாக மாப்புடனே பவுத்திர மூர் தீரும்.
பிருத்திருந்த பரந்தெழுந்த கரப்பனொடு விரந்தி மேகமின்ற சூலை பதினெட்டும் போய் விடுமே.

6. சூலை பதினெட்டும் போம் பிளவைகளும் போகும் குஷ்ட வாய்வு முதல் வாய்வு போகு
வாலைவா கரை முறுக்கும் வன் சூலைக் கட்டும் காலை முடல் மாக்கியமு மேக வகை யோடு வகைச் சூ
வாய்ச் சூலை காச வகை கூட பாலையிலே படுந் தீப் போல் நோய்களு மறிக்கும் பத்திரங்கள் சகலமுமாய் பன்றி மறையக

7. அசற்றவத செம்மறியாடு பன்றி பிறச்சி யப்பனே பச்சை மீன் பூசணிக்காய் புருக்கை
அகற்றி விடும் பத்தியங்கள் மூன் திங்கள் செய்கு வாமடா யெல்லாந் தாவச டொன்றிலை
யகற்றி விடில் பத்தியங்கள் தாழந் தப்பில் அனேகமாய் வீக்கங்கள் தைப்புண்டாம் போது
மகற்றி விடு மிதி பாகல் கசாயம் போட்டருந்த அசடெல்லாம் போயமுது சவுந்தருமுமாமே,

<u>மார்க்கண்ட நெய்</u> :-

ஆகுமே புனிதமார்க்கண்ட நெய்யே அன்பான பண்டிதர்க் காய்ச் சொன்னேன் கேளு
ஆமே நீ வெளியில் போகும் போது அன்பாகத் தட்டிடை தான் கொள்ளக் கேளு
ஆமே ஆவி நெய் படி தர்ளுக அன்பான நாயுருவி புளியாரைச் சாறு
ஆகுமே கற்பூர வள்ளிச் சாறு அடைவான துளசிச் சாறு பிரமிச் சாறே.

சாறான குமரிச் சார் வில்வச் சாறு தகரைச் சார் வல்லாரைச் சாறும் கட்டி
மாறான மாதளையின் பழத்தின் சாறு மறப்புளா தக்காளிப் பழத்தின் சாறு
பேறான பொருதலையும் செருப்படியின் சாறு பிசகாதே நற் கருவிப் பலின் சாறும்
நேராக பதினாறும் வகைக்குக் காலாம் நேர்மையான பதினாறு மூலிகை தான் கேளு.

கேளப்பா பதினாறு மூலிகையின் சாறும் கெளிதமுள்ள நெய் தனிலே விட்டு நீயும்
நாளப்பா மிளகுடனே சுக்கு இரு சீரகம், நலமான தேவதாரம் கற்கடக சிங்கி
வாளப்பா வசுவாசி செந்நகரப் பட்டை வளமையுள்ள மகரப் பூ குங்குமத்தின் பூவெ
பூவோடு முருங்கைப் பூ திருச்ச புகழான சரக்கெல்லாம் காஞ்சி வீதம்
பூவோடே நெய்தனிலே உறவு சேர்க்க புகழான மார்க்கண்ட நெய்யதாச்சே.

நெய்யதனை ரவியிலே மூன்று நாள் வைத்து நேராக சேர்ந்த பின்பு அடுப்பிலேத்தி
நெய்யதனை நீ காய்ச்சி இறக்கி* இறக்கிக் கொண்டு நெய்யதனைக் கொள்வதற்கு உதைய நேரம்
நிதானமாய் ஒரு கரண்டி உள்ளே கொள்ள.

கொள்ளவே பத்தியந் தானென்னவென்றால் கொடி தான மேகமெல்லாம் விரைவாய்ப் போச்சு
துள்ளுமே விந்து வழுகடல் போல் பொங்கும் தயிர் தீரும் வெப்பு வெல்லாம் சூலை தாரம் போ

மெள்ளவுமே திரேகமது பிடிக்க சுவாசம் நீறுன சார்தலொடு கண் புகைச்ச
வெள்ளளவு மக்டொட்டாயிந்த நெய் தான் யோக்கிய தோர் ரிறும்லொடு வீலை போமே.

போகுமே பஞ்சமொடு கிரந்தி சூலை பொல்லாத நீர்க் கடுப்புக் கல்லடைப்பு
சாருமே வெட்டை யொடு அக்கி மேகம் தங்காத மலக் கட்டுத் தலை சுழற்சல்
வேகுமே சுரம் மெல்லாம் அஸ்தி வறப்பு வேர்வையொடு வாய் நீரும் பீனிசமுஞ் சோகை
சேருமே யிந்த நெய் கண்ட போதே யோடியே பறந்தோடும் பிணிகள் கேளே,

முன் சொன்ன சரக்கு வகைக்கு விபரம்:-

செங்கத்தாரி, சன்ன லவங்கம், அகில கெந்தி, நன்னாரி, நெல்லி முள்ளி, கிரம்பு, கஸ்தூரி மஞ்சள், சுக்கு, மிளகு, சீரகம், தேவதாரம், கற்கடக சிங்கி, லவங்கப் பத்திரி, சடாமாஞ்சி, கிரம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, சிறு நாகப்பூ, சன்ன லவங்கம், கற்பூரம், குங்குமப் பூவு, முருங்கைப் பூ,

சல மத்சலி:-

அரப்பொடி விராகனிடை.க காந்தம் விராகனிடை.க, வெங்காரம் விராகனிடை.க, கல்நார் விராகனிடை.க, சங்கு விராகனிடை.க, சாஸ்திர வேதி விராகனிடை.க, நெல்லிக் காய்க் கெந்தகம் விராகனிடை.க, (வகைக்கு விராகனிடை.க வீதம்) வெடி உப்பு பலம்.உ, ஜலக் கறண்டியில் போட்டு உருக்கி உப்பு உருகும் போது இந்த சரக்குகளைச் கல்வத்தில் போட்டு தூள் பண்ணி உப்பு உருகிற சமயத்தில் சரக்குத் தூளைப் போட்டு கிண்டிக் கிண்டிக் காய்ச்சிறது. இப்படி மூன்று தரம் காய்ச்சி நாலாந்திரத்தில் தண்ணீராய் வரும் போது ஒரு பலகையில் ஊத்தி ஆறின பிறகு எடுத்து தட்டினால் வெங்கல இசை கேட்கும். அதை எடுத்து தூள் பண்ணி ஒரு விராகனிடை பொடிக்கு அரை விராகனிடை மிளகு தூள் சீனி சர்க்கரை அரை விராகனிடை ஒன்றாய்ச் சேர்த்து பசுவின் நெய் விட்டு மத்தித்துக் கொடுக்க நீர் வடிக்கும். பிறகு பிரமி வழுக்கையும் மிளகும் கசாயம் போட்டுக் கொடுக்கவும். இதுக்குத் தீரும் வியாதி நீராம்பல், மகோதரம், நீர்க் கவுசை தீரும்.

அறுவகைச் செந்தூரம்:-

வீரம், லிங்கம், கெந்தகம், தாளகம், மனோசிலை, கெவுரி, வெள்ளைப் பாஷாணம், ரசம், துத்தம், வெடியுப்பு, பூநீறு, வெங்காரம் இந்த சரக்குகளுக்கு விராகனிடை.க வீதம் நிறுத்தி கல்வத்தில் போட்டு பொடி பண்ணி அரைக்கக் கோழி முட்டை, சிகப்பு கரு வெள்ளைக் கருவை எழுத்தாணிக்கூரினால் பொத்து சிறுக துவார மிட்டு ஊத்திப் போட்டு சுட்டை எடுத்துக் கொண்டு அதுக்குள் மருந்தைச் சரியாய்ப் போட்டு சட்டியில் பாதிக்கு மணல் போட்டு அது மேல் முட்டையைப் புதைத்து முக்கால் முட்டை தெரியும்படி வைத்து மேல் சட்டி மூடி யெரு சீலை செய்து எட்டுச் சாமமெரித்து மருந்தை எடுத்து முட்டையும் மருந்தையும் சேர்த்து கல்வத்தில் போட்டு அரைத்து எடுத்துக் கொள்ளவும்.

விடபாகம், வீக்கம் இறக்கு குடிநீர்:-

சங்கு, நெருஞ்சி, சாறணை, கோவைத் தண்டுடன், நீர் முள்ளி, தாலிக் காயுடன் கடுக்காய், புளியாரை, நெல்லி வேப்பந் தோலுடன் மஞ்சிய கிட்டா யிரும்பு பிறமியம் மஞ்சள் நன்னாரி வழுதலை கொன்றை விழுதி கரப்பான் பட்டை மல்லி சுழுக் கொடியும் பங்கம் பாலை செங்கத்தாரி வேருடன் சிறு குருஞ்சாவம் பழகிய காடி கோசலம் விட்டு பதறவே எட்டொன்றாய்க் காய்ச்சி பொங்கிய குடிநீர் குடிக்க போது வயத்தில் கட்டியும் பீலியும் போக்கிடும் விடபாண்டு, சலாசத்து பற்பம் போட்டுக் கொடுக்கவும்.

சாம்பிராணித் தயிலம்:-

சாம்பிராணி பலம்.உ சேர் ஜலத்தில் வடி கட்டி புதுச் சட்டி அடுப்பில் காய வைத்து அதுக்குள் இந்தப் பொடியை போட்டு போனிச் சட்டியில் தண்ணீர் விட்டு

சட்டி மேல் வைத்து பண்டி வரையில் மன்றை தடலி எரிக்கவும். போனிச் சட்டி தண்ணீரில் ஊத்திப் போட்டு குப்புறக் கவுத்த போனிச் சட்டி அடியில் தயிலம் இருக்கும். அதை வழித்து சன்னி முதலானதுக்குப் போடவும்.

<u>அகத்தியர் குழம்பு</u>:- 26.8.63.

பெருங்காயம், இந்துப்பு, கடுகுரோகணி, வெங்காரம், கருஞ்சீரகம், திப்பிலி, சுத்தி செய்த இரதம் நாவிக் கிழங்கு மனோசிலை, தாரம் வகைக்கு விராகனிடை.க, சுத்தி செய்த வாளப் பருப்பு விராகனிடை.ம, காட்டா மணக்கு முத்துப் பருப்பு விராகனிடை.கு இவைகளை அரைக்க மெழுகாகும். இதைச் சிமிழிலடைத்துக் கொண்டு பணவிடை இஞ்சி சுரசத்திலாவது சுக்கு கசாயத்திலாவது இடக் குளிர் சுரம், சன்னி வாதம், வாத சுரம், அஷ்ட வாதம், வாயு, மூல வாய்வும் கடுக்காயில் இட இருமலும் கடுக்காய் கசாயத்தில் பித்த சுரமும் திப்பிலி கசாயத்தில் சிலேத்தும சுரமும் சிராம்பும் மதலை காஞ்சி வேரும் சேர்த்துச் செய்த கசாயத்தில் பேதி சுரமும் சுக்கு, மிளகு, கசாயத்தில் குளிர் சுரமும் ஆவின் நெய்யில் ரத்த மூலமும் ஆவின் பாலில் பாண்டும் மிளகு நாள் வெள்ளையில் மகோதரம் பெருவயறு நீராமை குன்மமும் தேன் இஞ்சிச் சாற்றில் சன்னியும், சுக்கும், நொச்சியும் சேர்ந்த கசாயத்தில் வாய்வும் சங்கங் குப்பிச் சாற்றிலாவது மிளகு பொரித்த பொரிகாரம், கற்கண்டு இவைகளைப் பொடித்த நெய்யில் மத்தித்து அதிலாவது வெள்ளரிப் பிஞ்சிலாவது இளநீரிலாவது காடியிலாவது கொடுக்க கருப்ப, நீர், செறிப்பு, கல்லடைப்பும் வெள்ளரித் தயிலத்தில் அல்லது வெள்ளரி கழச்சி மொசுமொசுக்கை கசாயத்தில் சன்னி பதினெட்டும் அரசங் கொழுந்தை ஆவின் பாலில் விட்டரைத்துக் கொட்டைப் பாக்குப் பிரமாணம் மூன்று பத்து செய்து நாவொன்றுக்கு ஒரு பங்கிற் கொள்ள கெற்ப ரோகமும் நாவற் பட்டையில் வெள்ளாட்டுப் பால் விட்டு இடித்துப் பிழிந்த சாற்றில் சீரகம் பொடித் தூவி அதிலாவது அல்லது நொச்சி வேர் பங்கம் பாளை வேர், சுக்கு, மிளகு இவைகளைச் சேர்த்துச் செய்த கசாயத்திலாவது கொடுக்க ஊதக வாய்வும் வாய்வுக் கட்டியும் இஞ்சி வெள்ளுள்ளி முருங்கைப் பட்டை எருக்கம் வேர் திருகு கள்ளி வேர், புங்கம் வேர் இவைகளைத் கட்டிப் பிழிந்த சுரசத்தில் உள் ஊத்தப் புற வீச்சும் கருப்புக் கட்டி சித்தி மூலம் இவை குப்பை மேனிச் சாற்றிலாட்டி தேன் விட்டு மத்தித்து அதிலாவது வில்வம் லவங்கப் பத்திரி சிராம்பு, அதிமதுரம், தாளிச பத்திரி இவைகளைச் சேர்த்து செய்த கசாயத்தில் நெய் விட்டு போட்டுக் கொடுக்க நெஞ்சு வலியும் தாளியிலையும் அவுரியிலையும் வெண்ணெயும் சேர்த்தரைத்துக் கொட்டைப் பாக்கு பிரமாணத்தில் விரியன் கடியும் நன்னாரி கொழுந்து மிளகு வெற்றிலையுஞ் சேர்த்தரைத்துக் கொட்டைப் பாக்கு பிரமாணத்தில் நல்ல பாம்பு விடமும் குமரிச் சாற்றில் உள்ளுக்குக் கொடுத்து கடி வாயில் தடவத் தேள் கடியும் வெல்லம் புகையிலை பேய்ப் பீர்க்கம் வித்து இவைகளை மேனிச் சாற்றிலரைத்துக் கொட்டைப் பாக்குப் பிரமாணத்தில் எலிக் கடியும் நொச்சிச் சுரசத்தில் திரிகடுகுப் பொடித் தூவிக் கொடுக்க வீக்கம், விடபாகம், காடியில் சத்தி வெடுக்கமும் ஆவின் பாலிலாவது வெள்ளாட்டுப் பாலிலாவது மூல வியாதியிலும் சீதம் விழுகிறதும் கெற்ப வலியும், கெற்ப ரோகமும் ஆவின் நெய்யில் மூலத்தில் ரெத்தம் விழுகிறதும் அகத்தியிலைச் சாற்றில் மகோதரமும் வெட்டையும் விளக்கெண்ணெயில் வாய்வுத்திரட்சியும் தேங்காய்ப் பாலிற் கழல் வாதமும் கருப்புக் கட்டியில் ஆனந்த வாய்வும் சுரமும் ஆவின் பாலிற் பித்தமும் பஞ்ச மூலக் கசாயத்தில் சன்னி. யஙு-ம் இஞ்சி சுரசத்தில் குன்மம் அ-ம் வெல்லத்தில் தாப சுரமும் நொச்சிச் சாற்றில் வாத சுரமும் கொத்த மல்லிக் கசாயத்தில் பித்த சுரமும் திப்பிலிக் கசாயத்தில் நடுக்கல் அய்ய சுரமும் வெள்ளாட்டு தயிரில் வயிற்றுக் கடுப்பும் கருப்புக் கட்டியில் சூலை. யஅ-ம் கிரந்தியும் ஆவின் தயிரில் ஊதக வாய்வும் விலாமிச்ச வேர்க் கசாயத்தில் பித்த வெட்டையும் செம்மறி யாட்டுப் பாலிலாவது சாம் பிராணித் தயிலத்திலாவது திராவக பெலங்கு. நாலும், திரிகடுகில் அரோசிகங்களும் வெற்றிலைச் சாற்றில் விடமும் சாதிக்காய் பொடியில் அசாத்திய சுரமும் நீங்கும்.

கொட்டைப் பாக்குப் பிரமாணம் மூன்று பங்கு செய்து நாளொன்றுக்கு ஒரு பங்கிற்
கொள்ள கெர்ப்ப ரோகமும் நாவற் பட்டையில் வெள்ளாட்டுப் பால் விட்டிடித்துப்
பிழிந்த சாற்றில் சீரகம் பொடித் தூவி அதிலாவது அல்லது நொச்சி வேர் பங்கம்
பாளை வேர், சுக்கு, மிளகு இலைகளைச் சேர்த்துச் செய்த கசாயத்திலாவது
கொடுக்க தக்க வாய்வும், வாய்வுக் கட்டியும் இஞ்சி வெள்ளுள்ளி முருங்கைப் பட்டை
எருக்கம் வேர், திருகு கள்ளி வேர், புங்கம் வேர் இலைகளைத் தட்டிப் பிழிந்த
சுரசத்தில் உள் குத்தப் புற வீச்சும் கருப்புக் கட்டி சித்திர மூலம் இவை இப்பை
மேனிச் சாற்றுலாட்டி தேன் விட்டு மத்தித்து அதிலாவது வில்வம் லவங்கப் பத்திரி
கிராம்பு அதிமதுரம், தாளிச பத்திரி இலைகளைச் சேர்த்து செய்த கசாயத்தில்
வெள்ளை போட்டுக் கொடுக்க நெஞ்சு வலியும், தாளியிலையும் அவுரியிலையும்;
வெள்ளையும் சேர்த்தரைத்துக் கொட்டைப் பாக்கு பிரமாணத்தில் விரியன் கடியும்
நல்வற் கொழுந்து மிளகு வெற்றிலையுஞ் சேர்த்தரைத்துக் கொட்டைப் பிரமாணம்
நல்லாவிஷ் விடகடியும் ஈருள்ளிச் சாற்றில் உள்ளுக்குக் கொடுத்து கடி வாயில் தடவத்
தேள் கடியும் வெல்லம் புகையூறல் பேய்ப் பீர்க்கம் வித்து இலைகளை மேனிச்
சாற்றுலரைத்துக் கொட்டைப் பாக்குப் பிரமாணத்தில் வழலைக் கடியும், நொச்சிச்
சுரசத்தில் திரிகடுகுப் பொடி தூவிக் கொடுக்க விக்கம், விட பாகமும் [illegible]
சத்தி மெடுத்தலும் ஆவின் பாலிலாவது வெள்ளாட்டுப் பாலிலாவது மூல வியாதியிலுல்
சீதம் விழுகிறதும் கெர்ப்ப விப்புருதியும் கெர்ப்ப ரோகமும் ஆவின் நெய்யில் மூலத்திலுல்
ரெத்தம் விழுகிறதும் அகத்தியிலைச் சாற்றில் மகோதரமும் வெட்டைக்கும் விளக்கெண்ணெ
யில் வாய்வுத் திரட்சியும் தேங்காய்ப் பாலிற் கமல் வாதமும் கருப்புக் கட்டியில்
ஆவர்த்த வாய்வும் சுரமும் ஆவின் பாலிற் பித்தமும் பஞ்ச மூலக் கசாயத்தில் சன்னி. யாவும்
இஞ்சி சுரசத்தில் குன்ம ட.அ.ம் வெல்லத்தில் தாப சுரமும் நொச்சிச் சாற்றில்
வாத சுரமும் கொத்தமல்லிக் கசாயத்தில் பித்த சுரமும் திப்பிலிக் கசாயத்தில்
நடுக்கல் அய்ய சுரமும் வெள்ளாட்டு தயிரில் வயிற்றுக் கடுப்பும் கருப்புக் கட்டியில்
சூலை. மஹா கிரந்தியும் ஆவின் தயிரில் குதக வாய்வும் விலாமிச்ச வேர்க் கசாயத்தில்
பித்த வாச்சுக்** வெட்டையும் செம்மறி யாட்டுப் பாலிலாவது சாம்பிராணித் தயிரி
லாவது திரளாத பெரும்பாக்கு. நாகும் திரிகடுகில் அரோசிகங்களும் வெற்றிலைச்
சாற்றில் விடகடியும் சாதிக்காய் பொடியில் அசாத்திய சுரமும் நீங்கும்.

மேற்கண்ட குழம்பை நல்லெண்ணெயில் மத்தித்து போட ரணம் நீங்கும். வேப்
பெண்ணெயும் நல்லெண்ணெயும் கலந்து அதிற் குழம்பை மத்தித்துப் போட ஆறாத ரணம்
ஆறும். சிலந்தி அரையாப்பு பிளவை புற்றுக்கு உமி நீரிலாவது தேனிலாவது குழம்பை
மத்தித்துப் போடத் தீரும். முலைப் பாலில் மத்தித்து நாசியில் நசியம் விடத்
தலை இடி நீங்கும். முலைப் பாலில் மேற்கண்ட மருந்தை மத்தித்து நெறிகளில் பூச
நீங்கும். மரங்களிலேறி விழுந்து மயங்கின பேர்களுக்கு தண்ணீரில் பிழந்தவர்களுக்கு
கடுகுப் பிரமாணம் முலைப் பாலில் மத்தித்துக் கண்ணிற் போட நீங்கும். குழம்பைத்
தணலில் தடவி புகை பிடிக்க மேகவாத சன்னி பற்கிட்டு விடகடி கபால வலி, பேய்
பிசாசு நீங்கும். வேப்பெண்ணெயிலாவது சுக்கு கசாயத்திலாவது எள்ளுப் பிரமாணம்
உரைத்துக் கண்ணிலிட சன்னி நீங்கும். கண் வீங்கி வேதனை கண்டால் சிறு சோற
தயிரும் சந்தனமும் மத்தித்து கண்ணிற் கட்ட நீங்கும். மேற்கண்ட குழம்பினும் மேற்
காட்டிய மற்ற வாளஞ் சேர்ந்த மாத்திரையினும் பேதி அதிகரித்தால் அதற்கு மாற்
வசம்பைச் சுட்ட கரியையாவது ஒரு பிடி முருங்கை வீர்க்கையாவது கசாயஞ் செய்து
கொடுத்தாலும் எலுமிச்சம் பழ ரசமும் ஆவின் பாலும் கொடுத்தாலும் புளித்த மோர்
காடியைக் குடித்தாலும் காட்டா மணக்கின் கொழுந்தைக் காடி விட்டு தொப்புளில்
வைத்துக் கட்டினாலும் கோழி ரசஞ் சாப்பிட்டாலும் பேதி நிற்கும்.

சுத்தி செய்த வாளம் விராகனிடை.௧, ராசலிங்கம் திரிகடுகு, சித்தா மணக்கின்
பருப்பு, வெங்காரம் வகைக்கு விராகனிடை.௧ இவற்றை செலத்தரைத்து குன்றி போலுண்டை
செய்து வாழைப் பழத்துக்குள் வைத்து உண்டு கொஞ்சம் குளிர்ந்த ஜலங் குடிக்க விரோ

தண்ணீரில் கரைத்துக் கொடுக்க நிற்கும்.

சுத்தி செய்த நேர்வாள முத்து.உ, எலுமிச்சம் பழச் சாற்றில் மூன்று நாளூற வைத்துக் கழுவிக் கல்வத்திட்டு கடுக்காய்.ய மிளகு. சுக்கு, திப்பிலி, நற்சீரகம் வகைக்கு விராகனிடை.ய பழச்சாற்றிட்டு சுண்டைக்காய் போலுண்டை செய்து வெந்நீரிலிட விரோசனமாகும். வாய்வு வாதம், கிருமி நீங்கும். அதிகப் பட்டால் வசம்பு, சாம்பல் தண்ணீரில் கரைத்துக் கொடுக்க நிற்கும்.

இரதம் விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.உ, பொரிகாரம் விராகனிடை.ங, மிளகு.ச, சுக்கு விராகனிடை.ரு, கடுக்காய்.க, வாளப் பருப்பு விரா.அ, வெல்லம் விராகனிடை.யய சேர்த்தரைத்த சுண்டைக்காய் பிரமாணம் சாப்பிட விரோசனமாகும். மோர் அசனஞ் செய்ய வாயு சுரம் நிற்கும்.

<u>நீடு பற்பம்:-</u>

லிங்கம், செங்காரம், இந்துப்பு, கடுக்காய், கடுகுரோகணி, வெள்ளைக் காக்கணம் வேர் வகைக்கு விராகனிடை.ய சுத்தி செய்த வாளம் விராகனிடை.அ இவைகளை பிரண்டைச் சாற்றில் இரண்டு சாமமாட்டி கடலை போலுருட்டி இஞ்சி சாற்றிலாவது வெந்நீரிலாவது கொடுக்க விரோசனமாகும். மிளகு நீரசனஞ் செய்ய வாயு சுரம் நீர்க் கோர்வை, வயிற்றுப் பொருமல் நீங்கும்.

கடுகு ரோகணி, வெள்ளைக் காக்கணம் வேர்ப் பட்டை, சாரணை வேர், மிளகு திப்பிலி, வெங்காரம், சிவதைவேர் வகைக்கு விராகனிடை.ச சுத்தி செய்த நேர்வாளப் பருப்பு விராகனிடை.யச, பிரமியிலைச் சாற்றால் மெழுகு போல் மூன்று நாளரைத்த இஞ்சி சாறு, பனைவெல்லம், வெந்நீர் இவைகளிற் கொடுக்க விரோசனமாகும்.

சுத்தி செய்த வாளம் விராகனிடை.அ, சாஸ்திர வேதி, சிற்றாமணக்கின் பருப்பு காரம் வகைக்கு விராகனிடை.ரு, சாதிலிங்கம் விளாவரிசி, கடுகுரோகணி வகைக்கு விராகனிடை.க, கடுக்காய் விராகனிடை.உ, கள்ளிப் பாலால் ஒரு நாளாட்டி [illegible]ங்காய் போலுருட்டி ஒரு குளிகை வாழைப் பழத்தில் பொதிந்து கொடுக்க விரோசனமாகும். வெந்நீர் குடிக்க விரோசனம் அதிகப் படும். தண்ணீர் குடிக்க நிற்கும்.

<u>மோரசனஞ் செய்யவும்:-</u>

சுத்தி செய்த தாளகம் திரிகடுகு, திரிபலை, சிவதை வகைக்கு விராகனிடை.ய, நேர்வாளம் விராகனிடை. இரசம் கெந்தகம் வகைக்கு விராகனிடை.க இஞ்சிச் சாற்றிலொரு நாளாட்டி குன்றி போலுண்டை செய்து இஞ்சிச் சாற்றிலாவது வெல்லத்திலாவது கொடுக்க விரோசனமாகும். சுரம் நிற்கும்.

ஏலம், லவங்கம், அதிமதுரம், கடுகுரோகணி, திப்பிலி, திப்பிலி மூலம், சாத்திர வேதி, சண்பகமொட்டு, இரத பற்பம் வகைக்கு விராகனிடை.க, நேர்வாளப் பருப்பு விராகனிடை.க வெந்நீரிலரைத்துக் குன்றி போலுண்டை செய்து வெல்லத்தில் கொடுக்க விரோசனமாகும். சுரம் நீங்கும்.

திரிகடுகுரோகணி, முருங்கைப் பூ சுத்தி செய்த பூரம் வகைக்கு விராகனிடை.க, நேர்வாளப் பருப்பு விராகனிடை.எ குளிர்ந்த சலத்திலாட்டி குன்றி போலுண்டை செய்து தேன் பால், வாழைப்பழம், சீனி இவைகளில் வியாதிக்குத் தகுந்தபடி கொடுகக கிருமி வாய்வு, மந்தம், பழஞ் சுரம், சோகை காமாலை, பாண்டு, பித்த வெறி, குன்மம், உடல் வாதம், வாயுக்குத்து கெட்டை கவுசி நீங்கும். மோரசனஞ் செய்யவும்.

<u>பேய்க் குமட்டிக் குழம்பு:-</u>

பேய்க் குமட்டிச் சார் படி.க, காயம் விராகனிடை.உ, கடுகுரோகணி, கருஞ்சீரகம், வாய்விளங்கம், இந்துப்பு, வெங்காரம் வகைக்கு விராகனிடை.உ, பேய்க் குமட்டிச் சாற்றைக் குழம்பாய்க் காய்ச்சி கல்வத்திட்டு மற்ற மருந்துகளையும் பொடித்துப் போட்டு அரைத்து சீசாவில் வைத்துக் கொண்டு குன்றியிடை பனை வெல்லத்தில் பொதிந்து கொடுக்க விரோசனமாகி வாதம், அயம், வாயு, அஷ்ட குன்மம், சூலை, கை முடக்கும் தீரும். மோரசனங் கொள்ளவும்.

ஒரு படி பேய்ச் சுரைக்காய்ச் சாற்றைக் குழம்பு போலக் காய்ச்சிக் கல் வத்திட்டு அதில் கருஞ்சீரகம், சுத்தி செய்த நேர் வாளப் பருப்பு கடுகுரோகிணி, கடுக்காய், வெங்காரம், இந்துப்பு, ஓமம், திப்பிலி வகைக்கு கழஞ்சி.க, கருப்புக் கட்டி கழஞ்சி.ரு, மயக்கமாய்ப் பொடித்துப் போட்டு அரைத்துச் சீசாவில் வைத்துக் கொண்டு குன்றிமிடை பழைய வெல்லத்திலிட விரோசனமாகி கவுசி கொண்டை, அலுவை வெப்பு பாவை, பெருவயறு, மகோதரம், பீலிகை, உள்மாந்தை, பிற நீர்க் கோர்வை, சோகை முதலியவை, வலி வீக்கம், வாயு தீரும். குளிர்ந்த ஜலத்தில் குளித்து மோரசனஞ் செய்யவும்.

<u>நாரத்தங்காய் லேகியம்</u>:-

சப்பு, நாரத்தங்காய் சாறு படி.ரு, காடி படி.உ, ஒன்றாய்க் கலந்து அதில் சுருள்ள ஐம்பது /1 இரும்பைப் போட்டு எட்டு நாளூற வைத்து இரும்பை எடுத்துப் போட்டு குப்பை மேனி அவுரி சாறு, கையாந்தகரை, பொன்னாங்காணி, பிரமி வகைக்குச் சாறு படி.உ, ஒன்றாய் விட்டு வெள்ளரி, சுக்கு, கடுக்காய், சதகுப்பை, ஓமம், நற்சீரகம், திப்பிலி, கருகு, கழற்சிப் பருப்பு, சுக்சோலம், அதிமதுரம், மிளகு, அதிவிடயம், நெல்லி முள்ளி, தானிக்காய், சாத்திர பேதி, ஏலம், இந்துப்பு வெடியுப்பு, சாறணை வேர், கருந்தொட்டி வேர் வகைக்கு பலம்.க சவுக்காரம் பலம்.உ, அரப்பொடி சிட்டம் வகைக்கு பலம்.உ, கடுக்காய்.சப, பெருங்காயம் பலம்.ஙு, மேற்கண்ட சரக்குகளாலரைத்துப் போட்டுக் காய்ச்சி குழம்பு பதத்தில் நறு நெய், தேங்காய் நெய், நல்லெண்ணை வகைக்குப் படி.½ விட்டு குழம்பு போல் கிண்டி வேளைக்கு ஒரு பாக்களவு மண்டலம் சாப்பிட்டு மோர் குடிக்க நீர்க் கட்டு, நீங்கும். மகோதரம், பெருவயறு, நீர்க் கோர்வை, வாய்வு கிரச்சி, அலுவை, சோகை பாண்டு, காமாலை, குன்மம், வயிற்று விப்புருதி குலை வாய்வு, குன்மம், வெப்பு பாவை, காச்சல் கட்டி கவுசி தீரும்.

நவச்சாரத்தைக் சொடிக் கள்ளிப் பாலிலாட்டி சீசாவிலடைத்துக் கொண்டு குன்றிமிடை கொடுக்க விரேசிக்கும். அதிகப் பட்டால் எலுமிச்சம் பழச் சாற்றைக் கொடுக்க மோரசனஞ் செய்ய நிற்கும். பெரு வயறு, வாய்வுக் கட்டி, மகோதரம் நீராம்பல் தீரும்.

<u>லிங்கக் குழம்பு</u>:-

சாதிலிங்கம், வெங்காரம் வகைக்கு கழஞ்சு.உ, சித்தா மணக்கின் பருப்பு கழஞ்சு.ச, மெழுகு போலரைத்து குன்றி மிடை இஞ்சி சாற்றிலாவது மிளகு கசாயத்திலாவது கருப்புக் கட்டியிலாவது கொடுத்து ஒரு நாழிகைக்கு மேல் வெந்நீர் கொள்ள விரேசனமாகும். குளிர்ந்த தண்ணீர் குடிக்க நிற்கும். உப்பிட்டுக் கஞ்சி கொள்ளவும்.

லிங்கம் விராகனிடை.க, பொரிகாரம் விராகனிடை.உ, சுத்தி செய்த வாளம் விராகனிடை.ச, சூமணக்கின் பருப்பு விராகனிடை.அ, உப்பு விராகனிடை.க, இவைகளை யரைத்து குன்றி மிடை கொள்ள மல சலம் நீங்கும். மோரசனஞ் செய்யவும்.

சுத்தி-சசம்*

சுத்தி செய்த லிங்கம் பலம்.க, ரச கற்பூரம், வெங்காரம் வகைக்கு பலம்.½, சுத்தி செய்த தொலி முளை நீக்கிய வாளம் பலம்.உ, சித்தா மணக்கின் பலம்.க, இவைகளை அரைத்துக் கொம்புச் சீசாவில் வைத்துக் கொண்டு பணவிடை சித்திர மூலக் கசாயத்திலாவது கொடுக்கவும். நொச்சிச் சாற்றில் வாத சுரமும் கொடுவேலி குப்பை மேனி நத்தைச் சூரி இலைகளின் சாறு படி.3/8, எண்ணெய் படி.½ ஒன்றாய்க் கலந்து காய்ச்சி வடித்த எண்ணெயில் கிராம்பும், ஏலம், அதிமதுரம் மல்லி, தக்கோலம், அரத்தை கோஷ்டம் வகைக்கு பலம்.க, நாலு படி தண்ணீர் விட்டு வற்ற வற்ற வைத்த கசாயத்தில் கொள்ள தொந்த சுரமும், கடுக்காய்ப் பூ கழற் பருப்பு வெள்ளுள்ளி சுக்கு வகைக்கு விராகனிடை.க அரைத்து அரை படி

தண்ணீர் போட்டு அரைக்கால் படியாய் வற்ற வைத்த கசாயத்தில் வாயுவும் அண்ட வாயுவும் சங்க வேர்க் கசாயத்தில் மேகச் சொறி விஷ சுரப்பானும், நிலவாகைக் கசாயத்தில் வலி குன்மமும், செங் கடுக்காயும், பூவரசம் பட்டையும் சேர்த்துச் செய்த கசாயத்தில் ஊழ காமாலையும் சிறு சின்னிச் சாற்றில் கெர்ப்ப ரோகமும். வெல்லத்தி லிடக் கிருமியும் நீங்கும். வெந்நீர் ஆவின் மோர் கூட்டி அசனஞ் செய்யப் பேதி நிற்கும். குளிர்ந்த தண்ணீர் குடித்தால் பேதி அதிகப்படும். இல்லா விட்டால் செம்பைச் சுட்ட சாம்பலை சுடு தண்ணீரில் கலக்கி கொடுக்க நிற்கும். எள்ளுப் பிரமாணம் வெற்றிலைச் சாற்றில் மத்தித்துக் கண்ணிலிட விப்புச் சன்னி தோஷந் தீரும். எருக்கம் பழுப்புச் சாற்றிலரைத்துக் கண்ணிலிட விஷம் நீங்கும். வத வேளைச் சாற்றிலிட எலி கடியும் தீரும்.

<u>விரோசனக் குடிநீர்:-</u>

பிரமியிலை பிடி. க, விரை போக்கிய கடுக்காய் கழஞ்சு. ச, களிப் பாக்கு கழஞ்சு. ௩, சுக்கு கழஞ்சு. ௭, இந்துப்பு அல்லது முந்திரி உப்பு கழஞ்சு. க இவைகளைச் சிதைத்து ஒரு படி தண்ணீரிற் போட்டு எட்டொன்றாய் வற்ற வைத்து மூன்று தடவை வடி கட்டிச் சாப்பிட நன்றாய் விரோசனமாகும். பிரமியிலையை நீக்கி மற்ற மருந்துகளை மயனமாய்ப் பொடித்து அரைக்கால் படி இஞ்சிச் சாற்றில் கலந்து கொடுக்க பழ மலமும் மலபந்தமும், வாய்வும் நீங்கும். அவித்து மோரசனஞ் செய்யவும். தேங்காய்ப் பாலும் முடக் கொத்தானிலையும் ஒரு நிறையாய்ப் பிட்டவித்து அரைக்கால் படி சா பிழிந்து குடிகட்டி சாப்பிட விரோசனமாகும். அல்லது ஒரு பிடி முடக் கொத்தானிலையை அவித்துப் பிழிந்த தண்ணீரிற் கொச்சம் பழம் புளி, கடுகு, சீரகம், மிளகு, சேர்த்து ரசஞ் செய்து அரைக்கால் படியில் அரை வீசம் படி சிற்றாமணக்கெண்ணெய் விட்டு மத்தித்துச் சாப்பிட விரோசனமாகும். அவித்து அசனஞ் செய்யவும்.

இந்துப்பு விராகனிடை. க, களிப் பாக்கு விராகனிடை. உ கடுகு ரோகணி விராகனிடை. ௩, கடுக்காய் விராகனிடை. ச, நிலவாகை விராகனிடை. ரு, கருவேலங் கொழுந்து விராகனிடை. , கற்றாழை சருகு விராகனிடை. எ பிரமியிலை விராகனிடை. அ இவைகளைச் சிதைத்து அரைப்படி தண்ணீரிற் போட்டு நாலிலொன்றாய் வற்ற வைத்து நா தபா வடிகட்டி கொடுக்க நன்றாய் விரோசனமாகும்.

தேங்காய்ப் பால் படி. மாகாணி, மிதி பாகல் சாறு அரை மாகாணிப் படி இவைகளை மத்தித்துச் சாப்பிட விரோசனமாகிக் கிருமிகள் விழும். மேக நீர், மேகப் புண் நீங்கும். புளி தள்ளி நீர்க் கஞ்சி கொள்ளவும்.

பூவரசம் பட்டையில் ஊறின பால் விட்டரைத்த நாலாறு தபா வடிகட்டி உட் கொள்ள விரோசனமாகும். புளி தள்ளி நீர்க் கஞ்சி கொள்ள மலக் கட்டு, நீர்க் கட்டு நீங்கும்.

சிறு செருப்படையையும், சருள்ளிலையும் இடித்துச் சாறு வாங்கி ௩ தபா வடிகட்டிச் சாப்பிட பேதியாகும். மேகச் சிரங்கு முதலானவைகள் நீங்கும்.

சிறு நாகப்பூ, ஏலம், லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, வாய் விளங்கம், திரிகடுகு, முந்திரியுப்பு அல்லது இந்துப்பு இவை சரி யுலர்த்தி ஒரு கட்டை சூரணம் வகைக்கு விராகனிடை. ௩ பாலிலவித்து சுத்தி செய்துலர்த்தி இடித்த பொடி விராகனிடை. உ, சேர்த்து சீனியிலாவது வெந்நீரிலாவது கொள்ள விரேசனமாகும். அவித்து மோரசனங் கொள்ளவும்.

பாலிலவித்துச் சுத்தி செய்துலர்த்தி இடித்த அதிமதுரம் விராகன். ௩, திப்பிலி அரை விராகன். 1½ இவைகளை ஆவின் நெய்யிற் குழைத்து அசனத்தின் பேரிற் இரவில் சாப்பிட்டு வர மலபந்தம் நீங்கும்.

கருஞ்சீரகப் பொடி முந்திரியுப்பு வகைக்கு விராகனிடை. உச சுக்குப் பொடி விராகனிடை. உ, ஒன்றாய்க் கலந்து. அ விராகனிடை இரவில் அசனத்தின் பேரில் சாப்பிட்டு வரக் காலையில் மல விருத்தியாகும். மலக் கட்டு நீங்கும்.

ஜாதிபத்திரி விராகனிடை.உச நந்திரிப்பு விராகனிடை.சஅ, அக்குப் பொடி விராகனிடை.உ இவைகளை ஒன்றாய்க் கலந்த பொடி விராகனிடை.க தம்ளரு பொடியிற் கொள்ள விரேசனமாகும். சுக்கு, பெருங்காயம், கருவேப்பிலை வகைக்கு தோலா.க, திப்பிலி, நற்சீரகம், இந்துப்பு வகைக்குத் தோலா. 3/8 இவைகளை ரவிர்வர்த்திப் பொடித்த நெய்யில் மத்தித்துப் போசனத்தின் பேரிற் சாப்பிட்டு வர வாயும் மலக் கட்டும் தீரும்.

கருவேப்பிலையும், நில வாகையும் ஓர் நிறையாய்ப் பொடித்த திரிகடி தேனில் மத்தித்த அசனத்தின் பேரில் சாப்பிட்டு வர மலக் கட்டு நீங்கும்.

திரிகடுகு, சரகம், இந்துப்பு, கருவேப்பிலை பெருங்காயம் ஓர் நிறையாய் சூரணித்த திரிகடி ஆவின் நெய்யில் மத்தித்து இரவில் அசனத்தின் பேரில் சாப்பிட்டு வர மலச் கட்டு நீங்கும்.

மூலம் ஓர் நிறையாய்ப் பொடித்த திரிகடிப் பிரமாணம் சாப்பிட்டு வெந்நீர் கொள்ள மலம் சுத்தியாகும்.

ஒரு நார்த்தங்காயைச் சிறுக அரிந்ததில் திரிகடுகு இந்துப்பு, காயம், சத்சீரகம், நற்சீரகம் வகைக்கு விராகனிடை.க இவைகளைச் சூரணித்துத் தூவிக் கள்ளிப் பால் விட்டுப் பிசறி எட்டு நாள் வரை ரவியில் காய வைத்துப் பொடித்துப் பணவிடை வெல்லத்திலாவது வாழைப் பழத்திலாவது வைத்துக் கொடுக்க விரேசனமாகும்.

சிறு கள்ளி வேர்ப் பட்டையை ஆவின் பாலிலவித்து கழுவி நீரிலலத்தி கால் விராகனிடை தாம்பூலம் அருந்தும் போது கூடப் போட்டு மென்று அமிழ்த்து உள் கொள்ள நன்றாய் விரேசிக்கும். சந்தனத்தை தேகத்திற் பூசிக் கொள்ள நிற்கும். சாபு மல பந்தம் நீங்கும்.

ஏழு மிளகும், மிதிபாகலிலையும் அரைத்து ஒரு கொட்டைப் பாக்குப் பிரமாணம் கொடுக்கப் பொடிக் கிருமிகள் கட்டோடு விழும்.

வேப்பீர்க்கு.ய, கடுக்காய்.ச இவைகளைப் பிரண்டைச் சாற்றில் மையமாயாட்டி விரைக்கூளையில் மத்தித்துக் கொடுக்க கிருமிகள் விழும். தமம், புரசம் விரை, வேப்பீர்க்கு, பிரண்டை இவைகளை வெள்ளாட்டு நீரிற் கஷாயஞ் செய்து சுக்குகுணம்*தேகதருக்* வடி கொடுக்கப் பந்த பக்கீரகக் கிருமிகள் விழும்.

இரண்டு புரசம் விரையை எருமைச் சாணியிற் பொதிந்து நலத்திருந்து காலையில் தோலி நீக்கி ஆவின் பாலிலரைத்துக் கலக்கிக் குடிக்க கிருமிகள் கட்டோடே விழும். சரக்கொன்றைக் கொழுந்தை அவித்துப் பிழிந்து தண்ணீரிற் சீனி கலந்து அரைக்கால் படி சாப்பிடக் கிருமிகள் விழும். ஒரு விராகனிடை பேய்ப் பீர்க்கம் விரைப் பருப்பையாவது நூனைக் காலியாவது தேன் வெல்லத்தில் கொடுக்க கிருமிகள் நீங்கும்.

<u>எண்ணெய்:-</u>

ஆவின் பால் படி.ஐ, சிற்றாமணக்கெண்ணெய் படி.வ, இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் வேலிப் பருத்தி வேர்ப் பட்டை ஒரு எலுமிச்சங் காய் பிரமாணம் எள்ளு பலம்.ச அரைத்துப் போட்டுக் காய்ச்சி பதத்தில் வடித்து நாகபுரசம் விரையை மயமமாய்ப் பொடித்துப் போட்டு ஐந்து நாள் சென்ற பின்பு காசளவு சாப்பிட பேதியாகும். கிருமிகள் விழும். சுடு கஞ்சி கொள்ளவும்.

சித்தா மணக்கெண்ணெய் படி.க, ஆவின் பால் படி.ச ஒன்றாய்க் கலந்து அதிமதுரம் இந்துப்பு, கடுக்காய், கடுகுரோகணி, வாளப் பருப்பு வகைக்கு கழஞ்சு .ச அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து சிறு பிள்ளைகளுக்கு ஒரு கரண்டியும் பெரியோர்களுக்கு மூன்று கரண்டியும் கொடுத்து ஒரு நாழிகைக்குப் பிறகு வெந்நீர் கொள்ள நன்றாய் விரேசனமாகி வாயு வாதம் சிரங்கு சொறி கரப்பன், கணை மாந்தம் அஸ்தி சுரம், அஸ்தி வெட்டை தேக வலி கடுப்பு வாத நீர்ச் சுரப்பு, பித்தம் நீங்கும். பத்தியம் உப்புச் சேர்த்த நீர்க் கஞ்சி கொண்டு மாயிலை சீரகம்

மிளகு, சுக்கு, இவைகளைக் கஷாயஞ் செய்து சாப்பிட்டு இரவில் மோரசாதஞ் செய்யவும்.

சதுள்ளி, கடைக் கொழுந்து, கடுக்காய்த் தோல் இவைகளைச் சிதைத்து விளக் கெண்ணெயிற் போட்டு எரித்து சி குழந்தைகளுக்கு ஏற்ற அளவு கொடுக்க விரோசன மாகிக் கிருமி விழும்.

விளக்கெண்ணெய் படி.௧, கள்ளிப் பால் படி.3/8, முற்றிய தேங்காய்ப் பால் படி.ச திருக அரிந்த வெள்ளைப் பூடு படி.3/8 இந்துப்பு வெங்காரம், சவுக்காரம் வகைக்கு கழஞ்சு.க மயனமா யரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துக் காலிடை கொடுக்க கிருமி கட்டோடிட விழுந்து வாயு, பொருமல், மேக சூலை, சூடக்கு, சொறி சிரங்கு, திரும். சிற சிர்ஙிலைச் சுட்ட சாம்பல் படி.க, நாலு படி சலத்திற் கரைத்து வைத்து நாலா நாள் தெளிவிறுத்துக் காய்ச்சி உப்பெடுத்து பணவிடை கொடுக்க விரோசனமாகி நீர்க் கட்டு, வாயு குன்மம், வாதம், அக்கினி மந்தம், கை கால் பிடிப்பு, சூலை சோகை, பாண்டு காமாலை, வீக்கம், பொருமல் பயித்திய வாய்வு நீங்கிப் பசியுண் டாகும். தாது விர்த்தியுண்டாகும்.

நாபி விரோசனம்:-

ரசம், கெந்தகம் வகைக்கு விராகனிடை.க, வாளம் விராகனிடை.௩, அபின்சி விரைப் பருப்பு விராகனிடை.ச வெங்காரம் விராகனிடை.ரு, சித்தா மணக்கின் பருப்பு விராகனிடை.எ கொல்லைப் பழத்தின் பருப்பு விராகனிடை.அ, கடுக்காய்த் தோல் விராகனிடை. கருக்கில் பருப்பு விராகனிடை.ய இவைகளைக் கள்ளி பாலில் மூன்று நாள் அரைத்து முற்றிய தேங்காய்க் குள்ளடைத்து பசுஞ்சாணத்து நான் தாலியப் புடம் வைத்தெடுத்துச் சிரட்டை நீக்கி அரைத்து வெங்கலப் பாத்திரத்திற் றப்பிச் சூரியப்புடம் வைக்கத் தயில மிறங்கும். அதைச் சிமிழிலடைத்து அரைப் பிரமாணம் நாவில் வைக்க விரோசன மாகும். குளிர்ந்த தண்ணீரிற் குளித்து மோரசனஞ் செய்து சந்தனத்தை நாவிற் தடவி முகர்ந்தால் விரோசனமாகும்.

களிம்பு:-

துரிசு பலம்.க, நவக்கி வெங்காரம் விராகனிடை.க இந்த இரண்டு மருந்தை யும் சட்டியில் போட்டுக் காட்டா மணக்குப் பால் விட்டுக் கிண்டிப் பதமாய் வருகிற காலத்தில் பதம் பார்த்து இறக்கி வைத்தாற் செந்தூர நிறமாயிருக்கும். அந்தக் களிம்பை எடுத்துப் புண்ணுக்குப் போடவும்.

லிங்க மெழுகு:-

குமரிச் சாற்றில் கடுக்காய்த் தூள் போட்டுப் பிசைந்து வைத்து அதில் வருகிற நீரைப் பத்து விராகனிடை லிங்கத்தில் ஒரு சாமம் சுருக்குக் கொடுத்துச் சீனிக் காரம் கருக வெங்காரம் பூநீர் வகைக்கு விராகனிடை.ரு எருக்கம் பால் விட்டு மெழுகு போல அரைத்து மூன்று பங்கிட்டு ஒரு பங்கைச் சட்டிக்குப் பூசிக் காய வைத்து நன்றாய்க் காய்ந்த பின்பு மற்ற இரண்டு பங்கையும் அது போல் பூசிக் காய வைத்து முன் லிங்கத்தை அரைத்து குளிசம் பசி ஏற்ற சீலை செய்து ஒட்ட புடம் போட்டு எடுத்துக் கரண்டியில் வைத்துக் கொடிக் கள்ளிச் சாற்றினொடு சாயஞ் சுருக்கு கொடுத்து கட்டியில் அசியிலுறு பத்திருக்கும். அந்த பதத்தில் கல்வத்திலிட்டு அரைக்க மெழுகாகும். அதைப் பணவிடை அநுபானங்களிலிடக் கிராந்தி மேகம், கரப்பன், காசம், சன்னி சுரம், சூலை நீரோடு தல், புண், பேதி வாதம், ரணம் நீக்கும்.

வீர மெழுகு:-

பரங்கிப் பட்டை, கொடுவேலி வேர், சிவல் வேம்பு, சர்வம், செங் கொட்டை ஒர் நிறையாய் நசுக்கிப் பரண்டக்கிட்டுக் குழிக் தயில மிறக்கிச் சுத்தி செய்து சவ்வீரம் லிங்கம், ரசகற்பூரம் வகைக்கு விராகனிடை.ல, ரசம் அரிதாரம் கருசு பற்பம், இந்துப்பு வகைக்கு விராகனிடை.க இவைகளை மயனமாய்ப் பொடித்துக் கரண்டியிற் போட்டுக் கால் படி தயிலம் விட்டு ஓயாமற் கிண்டிக் கொடுத்து வற்றிய

பிஞ்சு தேன் படி.1/8 விட்டுக் கிண்டி மெழுகு பதத்தில் கல்வத்திலிட்டு சாதிக்காய் கார்கோலரிசி, திரிகடுகு, கோஷ்டம், அரத்தை, தேசாவரம், அக்கிராகாரம், சன்னி நாயகம், திப்பிலி மூலம், ஓமம், திப்பிலி, கொடிவேலி, வேர்ப் பட்டை வகைக்கு விராகனிடை.௧, பொடித்து வடிகட்டிச் சேர்த்து தேன் விட்டு இரண்டு சாமம் மெழுகு போலாட்டித் தந்தச் சிமிழிலடைத்துக் கொண்டு குன்றிக்காய்ப் பிரமாணம் கருப்புக் கட்டியில் பொதித்து இரு வேளை கொடுக்க நெஞ்சடைப்பு மார்பு குத்து, விப்புருதி, விலாப்புகளி, வயிற்று வலி, முகவாத சன்னி, சூலை பதினெட்டு கரப்பான் உதிரக் கிரட்சி தேகக் கடுப்பு, சுதக வாய்வு, மந்தார காசம், சன்னி தோஷம், கை காலில் விழும் கருப்பு வெள்ளை சொறி சிரங்கு படர் தாமரை, குஷ்டம் மேகராகம், கிரந்தி, அரையாப்பு, மேகம் பத்து, அஸ்மாங்கிச அடைப்பு தீரும். பத்தியம் புளி, புகை தள்ளவும். கொஞ்சம் வயலை கட்டும். ஒரு பலம். கெந்தகத்தில் ஆவின் வெண்ணெயைப் போட்டு உருக்கி மூன்று தபா மிளகு தக்காளிச் சாற்றிலும் இரண்டு தபா வேலிப் பருத்திச் சாற்றிலும் சாய்த்தெடுத்து அதையும் நாலு செங்கொட்டையும் வெட்டி அரைக் கால் படி விளக்கெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி ஒரு சொட்டுக் கீழே விட்டுப் பார்க்க கெந்தக நிறமில்லாமலிருந்தால் அந்தப் பதத்திலிறக்கி வைத்துக் கொண்டு ஒரு விராகனிடை ரசத்தில் விட்டு மத்தித்து வேளைக்குக் கால் பணவிடை வீதம் சர்க்கரையிற் கலந்துண்ண மேகம்.௨௰௧-ம் சூலை கிரந்தி அரிச் சிரங்கு, வெட்டை தீரும்.

கெந்தகம் விராகனிடை.௰௫, ஆவின் வெண்ணெய் பலம்.௨, சேர்த்து மெழுகு போலாட்டித் சீலையிலீட்டுத் திரித்துக் கிழி கொளுத்தித் தீயில் தொங்கத்திச் சுடர்த் தயில மிறக்கிக் கல்வத்திலிட்டு இரசம் விராகனிடை.௨ சேர்த்து மெழுகு போலரைத்து வைத்துக் கொண்டு ஒரு பணவிடை வீதம் மூன்று நாளாறு பொழுது கருப்புக் கட்டியிற் கொடுக்க வாத சூலை தீரும். சங்கன் குப்பிச் சாற்றில் கொடுக்க கிரந்தி, அரையாப்பு பவுத்திரம் தீரும். சிறு செருப்படிச் சாற்றிற் கொடுக்க சிரங்கு சொறி தீரும்.

லிங்க ரச கர்ப்பூர மெழுகு:-

ரச கற்பூரம் விராகனிடை.௨ லிங்கம் விராகனிடை.௧ சூலைப் பால் எலுமிச்சம் பழச் சாறு தேன் இவைகளில் வகைக் கொரு சாமமாட்டிக் கரண்டியில் வழித்துப் போட்டு மேற்கண்ட சாறு கொஞ்சம் விட்டுத் தீபம் போலெரிக்க உருகி மெழுகாகும். பணவிடை வீதம் கருப்புக் கட்டியிற் கொடுக்க வயிற்று வலி சுதகத் திரட்சி தீரும். திரிகடுகுப் பொடியிற் கொடுக்க வாய்வு தீரும்.

சங்கு திராவகம்:-

அஞ்சாங் காச்சல் வெடியுப்பு பலம். சீனம் பலம்.௫, கல்லுப்பு, சவுட்டுப்பு வளையலுப்பு, பநீர் வகைக்கு பலம்.௨ இந்துப்பு, சாரம் வகைக்கு பலம்.௧, நாயுருவி உப்பு பலம்.௩ சிவக்க வறுத்த அன்ன பேதி பலம்.௫ இவைகளைப் பொடித்து மூன்று பங்கு செய்து முன் போல் திராவகம் வடித்து அபானன் கலிங்கு மேற்படி வியாதிகள் தீரும்.

நவலோக சத்துக் களிம் வீரம் சேர்த்து மேற்படி திராவகம் விட்டரைக்கக் காசம் தீரும்.

மகா திராவகம்:-

எருக்கு சுத்தி நாகமு, சூடுக்கை மைத்து நாயுருவி பிரண்டை அருகு சித்திர மூலம், தென்னோலை, வாழைக் கிழங்கு, குப்பை மேனி அரசு இலைகளைச் சுட்ட சாம்பல் வகைக்கு படி.௧, வெவ்வேறு பாண்டத்திட்டு ஒவ்வொன்றிலும் நாலு படி ஜலம் விட்டுக் கரைத்து வைத்து நாலா நாள் தெளிவிறுத்து தாச்சக் குழம்பு பதத்தில் பீங்கானில் விட்டு மோர் தெளித்து இரவில் பனியில் வைக்க உப்புறைந்திருக்கும். அதை ரவியில் காய வைத்த வகைக்குப் பலம்.௩, கல்லுப்பு வளையலுப்பு, இந்துப்பு, நவச்சாரம் வெண்மையாய் வறுத்த சீருக தத்தம், பூநீர் வகைக்கு பலம்.௫, சிவக்க வறுத்த

அன்னபேதி பலம்.ருய, ஐந்தாங் காச்சல் வெடியுப்பு.ஊ இவைகளைப் பொடித்த மூன்று பங்கு செய்து ஒரு பங்கைக் கலசத்திட்டு நன்றாய் வெந்த செங்கல் லை வட்டமா உறுத்து அதினடுவில் பெரு விரல் நுழையத் தக்க தமரிட்டு அதைக் கலச வாயிற் பொருந்த மூடி ஏழு சீலை மண் செய்து காய வைத்ததின் மேல் ஊறப் பொத்த சீசாவைத்துச் சீலை செய்து அடுப்பேத்தி தீயெரிக்கத் திராவக மிறங்கும். அதை மற்றொரு பங்கில் விட்டு விரவி உலர்த்திப் பொடித்துக் கலசத்திட்டு திராவகம் வடித்து மூன்றாவது பங்கில் விட்டு லர்த்தி பொடித்துச் சீசாவிலடைத்துக் கொண்டு.க முதல் ரு துளி வரை தண்ணீர் கசாய முதலான அநுபானங்களிலிட வயிற்று வலி குன்மம், பீலிகை நீராமை, கவுசி, பெருவயிறு, வாய்வுத் திரட்சி, காச்சக் கட்டி குதக வாய்வு, குதகத் திரட்சி, மகோதர முதலான உதர ரோகங்கள் தீரும்.

நாயுருவி, சிறு சின்னி, வாழை, கொள்ளை வெள்ளறுகு முள்ளி இவைகளின் உப்பு வகைக்கு பலம்.க, வெடியுப்ப பலம்.க, சீனம் பலம்.ரு, பூனீர் கூடன் சாரம் வெளுக்க வறுத்த கருசு சிவக்க வறுத்த அன்ன பேதி பாஷாணம் வகைக்கு பலம்.½, சுத்தி செய்த சிப்பி பலம்.வ இவைகளைப் பொடித்த மூன்று பங்கு செய்து முன் போல் திராவக மிறக்கவும். இதில் நவலோகமும் நீரும் செந்தூரமாகும். ஐந்தாங் காச்சல் வெடியுப்பு பலம். சீனம் இந்துப்பு வகைக்கு பலம்.ங, சிவக்க வறுத்த அன்னபேதி பலம்.7½, வெளுக்க வறுத்த கருசு கரியுப்பு வகைக்கு பலம்.உ, சாரம் பூனீர் வகைக்கு பலம்.க, பொரிகாரம் பலம்.½, இவைகளைப் பொடித்து மூன்று பங்கு செய்து முன் போல் திராவகம் வடித்த அநுபானங்களிலிட மேற்கண்ட வியாதிகள் தீரும்.

நவ லோகம் பாஷாணம் நீரும் சீன திராவகம்:-

ஐந்தாங் காச்சல் வெடியுப்பு பலம்.யரு, சீனம் பலம்.ய, கல்லுப்பு சவுட்டுப்பு, வளையலுப்பு, பூநீர் வகைக்கு பலம்.உ, இந்துப்பு சாரம் வகைக்கு பலம்.க நாயுருவி உப்பு பலம்.ங சிவக்க வறுத்த அன்ன பேதி பலம்.ரு, இவைகளைப் பொடித்து மூன்று பங்கு செய்து முன் போல் திராவகம் வடித்து அநுபானங்களிலிட மேற்படி வியாதி கள் தீரும். நவலோக சத்துகளில் வீரஞ் சேர்த்து மேற்படி திராவகம் விட்டரைக்க ரசமாகும். கெந்தகம் பூநீர் வகைக்கு பலம்.ய, சீனம் பலம்.உய, வெடியுப்பு பலம். கல்லுப்பு பலம். இவைகளைப் பொடித்த மூன்று பங்கு செய்து முன் போல் திராவகம் வடித்து அதில் தருசைத் தவைத்து ரவியில் வைக்க நீரும். அதற்கு நிகர் சாரஞ் சேர்த்து அரைக்கச் செய்நீர் ஆகும். வீரத்தை தவைத்து வாட்ட மெழுகாகும்.

பஞ்ச லவண திராவகம்:-

வெடியுப்பு, சீனம், கரியுப்பு வகைக்கு பலம்.ங, நவச்சாரம், வெண்காரம் வகைக்கு பலம்.4½, இவைகளைப் பொடித்து திராவகம் வடித்து குறுவை நெல் புழுங்கலரி பொரி மாவிலாவது நிலவாகைச் சூரணத்திலாவது கொடுக்க வயிற்றுப் பொருமல் வலி வாய்வுத் திரட்சி முதலான உதர ரோகங்கள் தீரும்.

மெழுகு திராவகம்:-

வெள்ளை மெழுகு பலம்.க, கரியுப்பு படி.1/8, சாதிக்காய, சாதிப் பத்திரி கிராம்பு வகை விராகன்.உ இவைகளில் மெழுகைக் கரண்டியிலுருக்கி அதில் மற்றவைகளைப் பொடித்துத் தூவிக் கிண்டி ஆற்றிப் பொடித்து அதில் நாலு சிரங்கை பொடி மணலுஞ் சேர்த்து கலசத்திட்டு திராவகம் வடித்து தேகத்திற் பூசி மாலை மிலரப்பிட்டுக் குளித்து வ சொரி சிரங்கு, மேக சொரி, ரணம் குஷ்டம் தீரும். காசளவு வெற்றிலையில் வைத்துக் கொடுக்க குன்மம் வயிற்று வலி தீரும். சுத்தி செய்த கரியுப்பு பலம்.அ, படிகாரம் பலம். இவைகளை எட்டு பலம் கடலைப் புளிம்பிற் கலந்து திராவகம் வடித்த ஐந்து துளி விட்டு கலந்து சாப்பிட்டு வர தீபன சத்தியையும் தேக பலத்தையும் கொடுக் கும். வாய மந்தம் அஜீரணம் நீங்கும்.

வெடியுப்பு திராவகம்:-

வெடியுப்பு பலம்.உய, சீனம் பலம். இவைகளைப் பொடித்து எட்டு பலம் கடலைப் புளிப்பிற் கலந்து திராவகம் வடித்து தண்ணீரில் ஐந்து துளி விட்டு நீடித்த சுரத் திலும் பலவீனமுடையவர்களுக்கு கொடுத்தால் பலமுண்டாகும். காசுக் கட்டி கரையும். எட்டாம் காச்சல் வெடியுப்பு பலம்.யய, சிவக்க வறுத்த அன்ன பேதி பலம்.யய, அல்லது உய சேர்த்துப் பொடித்து மூன் பங்கு செய்து முன் போல் திராவகம் வடித்து கொள்ளவும். இதில் வெள்ளி கரையும். வறுத்த கரியுப்பு பலம்.ரு, சிவக்க வறுத்த அன்ன பேதி பலம்.ய சேர்த்துப் பொடித்து மூன்று பங்கு செய்து முன் போற்றிராவக மிறக்கிக் கொள்ளவும். சிவக்க வறுத்த அன்னபேதியை மட்டும் திராவகம் வடித்து அதில் பலம்.1½, வறுத்த ஒரு பலம் கரியுப்பை பொடித்துப் போட்டு உலர்த்தித் திராவகம் வறுத்துக் கொள்ளவும். சித்திராவக மொரு பங்கும் முன் சொல்லிய வெடியுப்புத் திரா வகம் இரண்டு பங்கும் சேர்த்ததிற் போட நவலோகம் கரையும்.

வெட்டைக்கு:-

பருத்தியிலைச் சாறு நல்ல எண்ணெய் பாலடை சங்கு சுண்ணாம்பு கோழி முட்டை இவைகளை வைத்துக் கொண்டு மேற்கண்ட சுண்ணாம்பைக் கரைத்து தெளிய வைத்து தெளிவை யும் ஒரு கோழி முட்டைக் கரு எவ்வளவு கொள்ளுமோ அவ்வளவு விட்டுக் கலக்கிச் சாப்பிடவும். மூன்று நாள் சாப்பிடவும்.

தாளகம், லிங்கம், வீரம், பூரம், இரச செந்தூரம், மனோசிலை, வெள்ளை கௌரி இரசம், வகைக்கு விராகனிடை.2½, கெந்தி விராகனிடை.ரு இவைகளை நிம்பழச் சாத்தாலாட்டி துணியோட்டி நிழலுலர்த்தித் திரித்து புங்கு இலுப்பை ஆமணக்கு வேம்பு என்று இந்த ஐந்து வகை எண்ணெயையும் ஒன்றாய்க் கலந்து சுடர்த் தயில மிறக்கி உடலாதி அந்தமும் தவாலை யிட்டு இஞ்சிச் சாற்றில் ஒரு காசிடை தயிலங் கலந்து கொடுக்கத் தீரும். சன்னி தோஷமுந் தீரும். பத்தியம் உப்பு, புளி தள்ளவும்.

காஞ்சிரம் பழச் சாறு படி.க, சதுரக் கள்ளிப் பால், எருக்கம் பால் வகைக்கு படி. முக்கால் திருகு கள்ளிப் பால் படி.3/8, தேங்காய்ப் பால துவரைக் கசாயம் புன்னெண்ணெய் இலுப்பெண்ணெய், குருந்தெண்ணெய், ஆமணக்கெண்ணெய், நல்லெண்ணெய், கோழி முட்டைத் தயிலம் மயில் நெய் வகைக்குப் படி.ரு, வெள்ளாட்டு கறி அவித்த தண்ணீர் படி.ரு மேற்கண்ட பால் படி.க, ஒன்றாய்க் கலந்து அதில் சுக்கு, திப்பிலி, பேரரத்தை, சிற்றரத்தை, சதகுப்பை, செவியம், தேவதாரம், திப்பிலி மூலம், அகில், கோஷ்டம், மஞ்சள், மரமஞ்சள், மஞ்சிட்டி, கஸ்தூரி மஞ்சள், வாய் விளங்கம், புஷ்கரப்பான், பட்டை, விளாவரிசி, வெட்பாலை அரிசி, ஆனைத் திப்பிலி, உள்ளி பெருங்காயம், வெளிச்சிப் பிசின், கடுகு, ஓமம், சீரகம், வசம்பு, சிறுதேக்கு, காட்டுச் சீரகம், இந்துப்பு, சவுக்காரம், கெந்தி, பொரிக்காரம், கடுக்காய் அரிதாரம், கற்கடசிங்கி வகைடக்கு விராகனிடை.உ இவைகளை வெள்ளாட்டுப் பாலிலரைத்துப் போட்டு பதத்தில் வடித்து ஒரு காசிடை உள்ளுக்குங் கொடுத்து மேலிலும் பூசத் தீரும். இச்சா

பட்ச வாதம், தலைவாதம் முதலான சகல வாதத்துக்கு:-

எள்ளு, புங்கு, இலுப்பை, எரண்டம், கடுகு வேம்பு இந்த ஆறு வகை எண்ணெ யும் வகைக்குப் படி.உ, எட்டிப் பழச் சாறு படி.உ ஒன்றாய்க் கலந்து அதில் கரு நொச்சி கொன்றை சிறு குதஞ்சா, மாவிலிங்கம், விழுதி, வேலிப் பருத்தி, குன்றி, ஊமத்து, சங்கு அவுரி கண்டங் கத்திரி, தழுதாழை, முள்ளி குமிழ், புங்கு, முக்காவளை அழிஞ்சி, தைவேளை, மருக்காரை, சதுரக் கள்ளி, எருக்கு எட்டியிலைக் கள்ளி, கொடிவேலி, பாதிரி நெரிஞ்சி கத்தன் குதம்பை வாசி, ஆதன்டை செம்புளிச்சை களாத்தி, வெள்ளைக் குன்றி மலி, கொழிஞ்சி முருங்கை காட்டா மணக்கு காய்கு முருங்கை

வெப்பாலை, வெள்ளறுகு, சிவன் வேம்பு, சீந்திக் கொடி, அகவ கெந்தி, பிரம்பு இவைகளின் மூலம் வகைக்கு ஊக்கு.க, திப்பிலி அரத்தை, சுக்கு, ஓமம், மிளகு, வகைக்கு பலம்.உய, மரமஞ்சள், குங்கிலியம், வகைக்கு பலம்.ய, கொள்ளு தேவதாரம் வகைக்கு பலம்.ஙய, வெள்ளுள்ளி பலம்.யரு, இவைகளை எல்லாம் இடித்துப் போட்டு தழுதாழை மைத்து மாவிலிங்கை கழற்சி முருங்கை வேலிப் பருத்தி, விழுதி நொச்சி, ஆதண்டை இலைக் கள்ளி, எருக்கு வாகை, சதுரக் கள்ளி, சிற்று மணக்கு, இஞ்சி, எலுமிச்சம் பழம் இவைகளின் சாறு வகைக்கு படி.க, ஒன்றாய் விட்டுக் காய்ச்சி வடித்து உடம்பிற் பூச சகல வாதம், சன்னி, வலிப்புத் தீரும். பட்ச வாதம் முதலான வாதம்.அய, நீங்கும். மற்று

<u>கொடிய ரோகங்களுக்கும், கெந்தி, மெழுகு</u> :- 27.8.63

சுத்தி செய்த இருபது விராகனிடை நெல்லிக்காய்க் கெந்தியை அகன்ட இருப்புச் சட்டியிலிட்டு தீபம் போலெரித்து இருப்புக் குரட்டால் கிண்டி தயிலம் போல உருகி வருகிற சமயத்தில் இரண்டு பலம் கொம்புத் தேனைச் சிறுகச் சிறுக விட்டுக் கிண்டிய பின்பு அதில் சுத்தி செய்த வீரம், ரசகற்பூரம், சூதம் வகைக்கு விராகனிடை.யஉ மயனமாய்ப் பொடித்து தூளையும் இரண்டு பலத் தேனையும் கொஞ்சம் கொஞ்சமாய் விட்டு ஓயாமற் கிண்டிக் கொடுத்துப் பொங்கினால் ஆற வைத்து மறுபடியும் எரித்துக் கிண்டிக் கொடுத்து மெழுகானத்தின் பேரில் சிவந்த பதத்தில் ஆற்றிச் சிமிழிலடைத்துக் கொண்டு தேற்றான் விரைப் பிரமாணம் கருப்புக் கட்டியிற் பொதிந்து புழுங்கலரிசித் தவுட்டில் பிரட்டி நாளொன்றுக்கு இருபோது மூன்று நாள் . உருண்டை கொடுத்து புளி, உப்புத் தள்ளி ஆவின் பால், நெய் கூட்டிப் பத்தியம் வைத்து ஏழாம் நாள் தலைக்குத் தண்ணீர் வார்த்து ஒன்பதாம் நாள் பாலையும் மிளகையும் அரைத்துக் கொதிக்க வைத்து சிரசில் தேய்த்து நீராட்டிப் பதினோரா நாள் வாத தேகமானால் விளக்கெண்ணை வேப்பெண்ணை ஆவின் நெய் இவைகளை சிரளவாய்க் காய்ச்சி தேய்த்து ஸ்தானஞ் செய்விக்கவும். மற்றத் தேகமானால் விளக்கெண்ணை மட்டும் தேய்த்து ஸ்தானம் செய்விக்கவும். பட்ச வாதம், இளம் பிள்ளை வாதம், முதலான வாதம் எண்பதும் சகல கிரந்தியும் குலை யோனிப் புற்று லிங்கப் புற்று சகல குட்டமும் குறை நோய் மேகப் புண்ணு சொறி சூறைப் புண், புரையும், அண்ட வாதம், அண்ட சூலை, அந்தர வாய்வு முதலான சகல வாய்வும் சகல குன்மமும் தீரும். பசும் பயறு முளைக் கீரை கத்தரிப் பிஞ்சு அவரை கூட்டவும்.

நெல்லிலாவி முத்தாவி நல்லெண்ணை வாடை தாளித வாடை முதலானவைகளும் ஸ்திரீபோகம் கரப்பன் பதார்த்தமும் ஒரு மாதம் வரையில் தள்ளவும். வாய் கட்டினால் சீனிக் காரத்தை வாயிற் போட்டு அயிர்த்தத்தைக் குடித்து கருவேலம் பட்டைக் கசாயம் கொப்பளிக்கவும். சேற்றம வாய்வுக்குப் பறங்கிப் பட்டைக் கசாயத்தில் ஒரு குன்றியிடை கொடுக்கத் தீரும்.

<u>குஷ்டம்</u> :-

சிவல வேம்பு, வெள்ளெருக்கு சங்கு களாத்தி தழுதாழை, புங்கு குயிழ், மாவிலங்கு காட்டாமணக்கு, கழற்சி, விளா ஆவரை, மிகாறனை இவைகளின் வேர்ப் பட்டை வகைக்கு பலம்.ச, புங்கு இலுப்பை எண்ணை, பன்னை வேம்பு, அறிஞ்சி எட்டி இவைகளின் விரை வகைக்கு பலம்.ரு இவைகளைத் குழித் தயில மிறக்கி பத்து பலம் எட்டி விரையைச் சிறுதுண்டுகளாய் நறுக்கி அமுரியில் மூன்று நாளூற வைத்து சிறு தீயா யெரித்து வற்ற வைத்து உலர்த்தி இடித்து சூரணத்தையும் ஒரு பாண்டத்தில் குறளி வெள்ளாட்டுப் பால் விட்டு சீலையால் வேடு கட்டி யிதின் மேல் ஐந்து பலம் ஆடு தீண்டாப் பாளை வேர்ச் சூரணத்தை வைத்துப் பிட்டுவித்துலர்த்தினதையும் வாலுளுவை யரிசி தான்றிக் காய், கடுக்கா கரிய சீரகம், சுக்கு, கார்கோலரிசி வகைக்கு விராகனிடை.ச, நிலவாகை வேர் அவரி வேர், வகைக்கு பலம்.ரு, இவைகளை யிடித்து வடிக் கட்டின சூரணத்தையும் ஒன்றாய்க் கலந்து வேளை யொன்றுக்கு ஒரு கழஞ்சில் ஒரு பணவிடை தயிலம் வைத்து மண்டலங் கொண்டு தயிலத்தை உடம்பிற் பூசி வரக் குஷ்டம்.யஅ-ம், விஷ நீர், வண்டு கடியும் தீரும்.

நாகு பலம் சடைச்சி வேரை இடித்து நாழ மரக்கால் தண்ணீரில் போட்டு நாலிலொன்றாய் வற்ற வைத்து வடித்த அதில் மூத்தக் காசு வாயுவிளங்கரிசி, இந்துப்பு, திரிபலை, மஞ்சள், இஞ்சி, தேவதாரம், மாம் தேவி, செங்கொட்டை, பறங்கிப் பட்டை, மிளகு, காந்தம், அசுவ கெந்திக்கிழங்கு, மாவிலிங்கப் பட்டை, தில்லைப் பட்டை, கொடிவேலி வேர் பட்டை, சீரகம், கெந்தி, மஞ்சிட்டி, அதிவிடையம், கரிசாலை, சேவுகன் கிழங்கு வகைக்குக் கழஞ்சு.ச அரைத்துப் போட்டு நெய் படி.ச காடி பால் வகைக்கு படி.உ, கூட விட்டுக் காய்ச்சி வடித்து வேளைக்கு கரண்டி வீதம் மண்டலம் சாப்பிட்டு வர குஷ்டம்.யஅ, வாத சூலை, சூலைப் புண் தீரும்.

<u>லேபவம் உற்பவத்துக்கு:-</u>

பருத்திப் பால் சேர்.க, வாதாங் கொட்டை பால் சேர்.ரு, மல்லிப் பால்.க பசுவின் பால் சேர்.க, கசகசாப் பால் சேர்.க, சுக்கு பால் சேர்.க, சாதிக் காய் .உ சேலத் சர்க்கரை சேர்.க, பசுவின் நெய் சேர்.ரு, இத்தனையும் அடுப்பில் வைத்துப் பதமாய் எரிச்சு லேகியமாய்க் கிண்டிச் சாப்பிடவும்.

<u>நீர்க் குத்தலுக்கு:-</u>

புளியிலைச் சேர்.1½ அடுப்பில் பானையை வைத்துக் காய்ச்ச உடன் மேற்கண்ட சாற்றை விட்டு சுண்ணாம்பு எலுமிச்சங் காயளவு கூடப் போட்டு வடி கட்டிக் கொடுக்கவும்.

<u>சிரங்கு புண்ணுக்கு நெய்:-</u>

பசுவின் நெய்,ரு.கரு பரம் விராகனிடை.க லிங்கம் விராகனிடை.க, இரண்டையுங் கல்வத்திட்டு பொடி செய்து அதில் கொஞ்சம் நெய் விட்டு அரைத்து சட்டியை அடுப்பில் வைத்து நெய்யை விட்டு குளப்பி திருவு கள்ளி வேர் பலம்.க, போட்டுக் காய்ச்சி வேர் சிவந்த பதத்திலே இறக்கி வைத்து நெய் வடித்துக் கொண்டு புண்ணுக்குப் போட்டு வர ஆறும்

<u>ஆறாத புண்ணுக்கு எண்ணை:-</u>

நல்லெண்ணை சேர்.வ, பிரிய செந்தூரம் காசு,½, சிறுசி காசு.½; வெள்ளைக் கத்தக்காம்பு காசு.வ, காசுக் கட்டி காசு.வ, முதார சிங்கி விராகனிடை.வ, புரம் விராகனிடை.வ, கடுக்காய்.அ, இதுகளைப் பொடி செய்து சட்டியில் நல்லெண்ணையை விட்டு மேற்கண்ட சரக்கு பொடிகளை சிறுகச் சிறுகத் தூவிக் கிண்டி எண்ணை விட்டு விட்டு மெழுகான பக்குவத்திலிறக்கிக் கொள்ளவும்.

நறுணையிலையை அரைச்சு சட்டியில் வைத்துக் *கக்கலுக்* போட்டு விளக்கெண்ணையை விட்டுச் சிரங்கு மேல் வைத்துக் கட்டவும்.

<u>பிளாஸ்திரி:-</u>

ரசம் விராகனிடை.க, துத்தம் விராகனிடை.க, மருந்து வெள்ளை விராகனிடை.உ காசுக் கட்டி விராகனிடை.உ இதுகளை கல்வத்தில் போட்டுத் தாள் பன்னிப் பசுவின் வெண்ணையாவது எருமை வெண்ணையாவது போட்டு அரைத்து வழிக்கிற சமயத்தில் சுண்ணாம்பு கொஞ்சம் போட்டு அரைத்து வைத்துக் கொண்டு மேகப் புண் கிரந்தி, புண் இதுகளுக்கு துணியில் தடவி அனல் காட்டிப் போட்டு வர ஆறும்.

<u>பச்சை ஊதக மெழுகு:-</u>

லிங்கம் விராகனிடை.க, வீரகம் விராகனிடை.க, பூரம் விராகனிடை.க, மனோசிலை விராகனிடை.க, ரசம் விராகனிடை.க, வாளம் விராகனிடை.ய, இதுகளைக் கல்வத்தில் போட்டு அரைத்து மெழுகாய் வைத்துக் கொண்டு சுக்கிலாவது கருப்புட்டியிலாவது கொடுக்க சகல வியாதியும் தீரும்.

<u>வாய்வுக்கு:-</u> நற்சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, திப்பிலி, மிளகு, வெடியுப்பு, காசியம்

அதிவிடையம், ஓமம், வகைக்கு பலம்.ஏ சேர்த்து சூரணம் செய்து கொடுக்கவும் வாய்வு நீங்கும்.

ரசம், கெவுரி, வெள்ளைப் பாஷாணம், தருசு, காரம், தாளகம், இந்துப்பு, காயம், நிலம், துத்தம், சீனம், மிளகு, சுக்கு, கொல்லன் கோவை எட்டிக் கொட்டை. வேப்பெண்ணை, குமட்டிக் காய்,ச் சாறு படி.உ, நேர்வாளம் சத்தி புன்னை பலம்.ச, எருக்கம் பால் படி.கு வேப்பெண்ணெய்த் தயிலம் படி.ஒ, தேங்காய் நெய் படி.கு, இவைகளைச் சுடர்த் தயிலம் வடித்து சன்னி தோஷம் இதற்குப் போடவும்.

<u>வாதத் தயிலம்</u>:-

வேப்பெண்ணை விளக்கெண்ணை நல்லெண்ணை புங்கெண்ணை இலுப்பெண்ணை, தழுதாழை, காட்டாமணக்கு, நாயுருவி ஆதவேளை, குப்பமேனி, மாவிலிங்கை வேம்பு, வெண்நொச்சி, நாய்வேளை, கண்டங்கத்திரி, முந்து, கருவாகை, சங்கு, கொடிவேலி, நிலக் கடம்பு, சடைச்சி, குன்றி மணி, அவுரி மருக்காரை, எருக்கு, பாகல் முருங்கை, கார் முருங்கை, வெள்ளைச் சாறணை, மருதன்னை, காட்டு மல்லி, ஊமத்தை, உத்தாமணி, களச்சி, மிளகறணை, திருகு கள்ளி, குமிள், அழுக்கிறு, பிரப்பங் கிழங்கு, வெப்பாலை, அடம்பு, சிவ்வி, இலுப்பை, மேல் பிள்ளுருவி ஆவிப் பட்டை, ஆக வகை.ஙஅ வகைக்கு பலம்.ய இதுவெல்லாம் இடித்து நால பானையில் போட்டு தண்ணீர். மரக்கால் விட்டு எட்டு படியாக்க் காய்ச்சி சட்டியில் விட்டு ஒரு விறகால் எரிய விடவும். கடைச் சரக்கு திப்பிலி, திப்பிலி மூலம், ஆனைத் திப்பிலி, ஓமம், அரத்தை, சுக்கு, தாளிச பத்திரி, கண்டந் திப்பிலி, கோரோசனை, கருஞ்சீரகம், கிராம்பு, குக்கில், சதகுப்பை, வசம்பு, கல்நார், சிறுதேக்கு, காயம், உள்ளி, இஞ்சி, வெளிச்சப் பிசின், சிறு நாகப்பூ, சடாமாஞ்சி, சரக்கு வகைக்கு பலம்.ரு, மயில் பீலி பலம். இது வெல்லாம் அரைத்து எண்ணெயில் போட்டு கேசரி சார் படி.ச, கூட விடவும். இது எண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்துக் கொண்டு கஸ்தூரி விராகனிடை.க லிங்கம் விராகனிடை.க, ஆகாசத் தாமரி விராகனிடை.உ, உள்ளி தயிலம் படி., கோழி முட்டைத் தயிலம், முதலை முட்டைத் தயிலம் இது படி.1/8, தயிலத்தில் விடவும். வியாதி அறிந்து கொடுக்கவும். நிலவாகைச்

<u>நிலவாகைச் சூரணம்</u>:-

சுக்கு பலம்.க, மிளகு பலம்.க, ஓமம், வாய்விளங்கம், சர்க்கரை பலம்.ரு (சூரணம் செய்து கொள்ளவும்)

<u>கிராணிக் கழிச்சலுக்கு</u>:-

சுக்கு, திப்பிலி, மிளகு, அரத்தை, கோஷ்டம், அதிமதுரம், சிறுதேக்கு, வாய் விளங்கம், ஏலம், கடுக்காய், தானிக்காய், நெல்லி வற்றல், மல்லி, சிறு நாகப்பூ, தாளிச பத்திரி, லவங்கப் பத்திரி, போலங்க பத்திரி, நெல் பொரி, தேவதாரம், ஆக சரக்கு.ய வகைக்கு விராகனிடை.ச , சாதிக்காய் விராகனிடை.கவ சாதிப் பத்திரி கிராம்பு விராகனிடை.கவ, சீனி பலம்.உ, அதி விடையம் இஞ்சி பலம். வெல்லம் பலம். பசுவின் பால் படி.3/4 (முடிவில்லை)

<u>கோரோசனை மெழுகு</u>:-

கோரோசினை விராகனிடை.க, வீரம் விராகனிடை.க, பூரம் விராகனிடை.க மூன்று சரக்கையும் கல்வத்தில் போட்டு முலைப் பால் விட்டு அரைத்து அப்படியே கல்வத்தில் காய வைத்து அதற்குப் பிறகு தேன் விட்டு அரைத்து உருட்டிக் கொண்டு உதிர வாய்வு உதிரச் சிக்கலுக்கு கொடுக்கவும்.

<u>பூர மெழுகு</u>:-

பூரம் வேண்டியது வாங்கி விளக்கெண்ணெயில் சுருக்கு கொடுத்து கல்வத்தில் போட்டு கருப்புட்டி போட்டு அரைத்து உருண்டை பண்ணி பிரசவமான பேர்களுக்கு உதிரச் சிக்கலுக்கு கொடுக்கவும்.

நவச்சார மெழுகு:-

நவச்சாரத்தைக் கள்ளிப் பாலில் சுருக்கு கொடுக்க மெழுகு ஆகும்.

அன்ன பேதியை எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்து புடம் போடச் செந்தூரமாகும்.

புண்ணு கட்டிக்கு தைலம்:-

சேங்கொட்டை.உ சாளிப் பாலில் அவித்து எடுத்துக் கழுவி மூக்கு வெட்டி எடுத்துக் கொண்டு பசுவின் காநெய்யில் சேர்.3/4 போட்டு எரித்து தண்ணீர் மணமணப்பு அடங்கிற பதத்தில் சாதிக்காய் விராகனிடை.உ, சாதிப் பத்திரி விராகனிடை.உ வால் மிளகு விராகனிடை.உ, பூரம் விராகனிடை.க, லிங்கம் விராகனிடை.க, முலைப்பாலில் சுத்தி செய்து அரைத்துப் போட்டு. வெந்தய விதை பச்சைத் தண்ணீரில் ஊற வைத்து முன் சரக்குகளெல்லாம் வெங்காயச் சாற்றில் நத்தியிலையும் போட்டு அரைத்து நெய்யில் போட்டு எரிக்கும் போது கிராம்பு பலம்.க, நசுக்கிப் போட்டுக் கிளறி இறக்கிக் கொண்டு களக்காய் பிரமாணம் அந்தி சந்தி இரண்டு வேளை மூன்று நாளைக்கு உப்பு, புளி தள்ளுபடி: மறு பத்தியம் மூன்று நாள், இரு நாள் உப்பு வைத்துப் போட்டு ஏழா நாள் தலைக்குத் தண்ணீர் வார்த்திடுவது. கடும் பத்தியம்.

வெட்டைக்கு:-

நிலக் குமிள் இலை கொண்டு வந்து சாயந்திரம் புதுச் சட்டியில் போட்டு பச்சைத் தண்ணீர் விட்டு ஊறப் போட்டுக் காலமே எடுத்துப் பிழிந்து சாறெடுத்து சீனி சர்க்கரை போட்டு மூன்று நாளைக்குச் சாப்பிடவும். இச்சா பத்தியம்.

சண்ட மாருத செந்தூரம்:-

வீரம் பலம்.வ, பூரம் பலம்.வ, ரசம் பலம்.வ, லிங்கம் பலம்.வ, ரச செந்தூரம் பலம்.வ, கெந்தகம் பலம்.வ, அரப்பொடி பலம்.ரு, வெங்காரம் பலம்.1/8 இவைகளைப் பொடி செய்து ஆலக் கறண்டி காய வைத்து இறக்கி தரையில் வைத்து அதிகச் சாச்சலில்லாமல் அரைச் சூடாய் கறண்டி சூடு வைத்துக் கொண்டு மருந்தை அளைப் போட்டு வருகிற போது கருஞ் சிவப்பாயிருக்கிற போது புகையாமல் பதத்தில் எடுத்துக் கொள்ளவும். சகல வியாதிக்கும் அநுபானம் தேனிலாவது திரிகடுகுத் தூளிலேயாவது கொடுக்கவும்.

சூட பற்பம்:-

சூடனைக் கற்பூர வல்லிச் சாறு விட்டு நாலு சாமம் அரைத்து வில்லை தட்டி ஓட்டில் வைத்துக் கவசஞ் செய்து கிஜடைப் புடம் போடவும்.

மேகங்களுக்கு வல்லாதி லேகியம்:-

வேப்பம் பட்டை பூவரசம் பட்டை, ஒதியம் பட்டை, விளாம்பட்டை, இலுப்பைப் பட்டை, அரசம் பட்டை, புரசம் பட்டை, மருதம் பட்டை, உள்ள லத்தி பட்டை, அத்திப் பட்டை, ஆவரை பட்டை, பிரம்பட்டை, நாவல் பட்டை, நுணாப்பட்டை, வன்னிப பட்டை, பீசுரிபட்டை, பூவந்திப் பட்டை, கிலுநூர் வேம்பு, வெள்ளறுகு, சித்திரமூலம், அமுக்கிறக் கிழங்கு, கடுக்காய், தானிக்காய், கருஞ்சீரகம், காட்டுச் சீரகம், சிவதேக்கு, கார்போகரிசி, மஞ்சள், எள்ளு, சேங்கொட்டை சேர்.க, நத்தம் நிலப்பனைக் கிழங்கு, பூமி சர்க்கரைக் கிழங்கு, வசம்பு, ஓமம், சுக்கு, கெந்தகம் கருப்புட்டி பால் சேர்.உ, சேங்கொட்டை மூக்கு வெட்டி இரண்டு சேர் பாலும் இரு சேர் தண்ணீரும் சட்டியில் விட்டு கொட்டையைப் போட்டுக் காய்ச்சி ஒரு சேராக காய்ச்சி எடுத்துக் கொண்டு மேற்கண்ட கடைச் சரக்கை இடித்து பட்டையை அரைத்து காய்ச்சி அந்த சாற்றில் ஏறல் விழும் நாளெல்லாம் போட்டுக்கொண்டு

மெழுகு பதத்தில் இறக்கிக் கொண்டு மேற்கண்ட வியாதி அறிந்து அனுபானத்தில் கொடுக்கவும். புளி தள்ளுபடி. மேகம். உக-க்கும் கொடுக்கவும்.

நல்லெண்ணெய் படி.உ, கரிசாலை அவுரி கஞ்சா பொன்னாங்காணி, வெத்திலைச் சார், முசுமுசுக்கை, உள்ளத்தி ஆக்காணி;*வெத்திலைச்*சார்;*முசுமுசுக்கை;*உள்ளுத்தி* மூக்கிரட்டை, அத்திப் பட்டை ஆக வகைக்கு சாறு படி.க, ஆதண்டை சாறு படி.உ, எலுமிச்சம் பழச் சாறு ஆவின் பால் படி.க, துளசிச் சாறு படி இரண்டு; கருஞ்சீரகம், கடுகுரோகணி, கஸ்தூரி மஞ்சள், கடுக்காய், தான்றிக்காய், அதிவிடயம், அரத்தை, சுக்கு, கோஷ்டம், சதகுப்பை, ஓமம், செருநாகப்பூ, தாளிச பத்திரி, திப்பிலி மூலம், சித்திர மூலம், பெருங்காயம், நெல்லிமுள்ளி, மிளகரணை அழிஞ்சி நொச்சி, கீழாநெல்லி வகைக்கு ஒரு களஞ்சி பழச் சாத்தாலாட்டி எண்ணெயிலே போட்டு பதமாய் காய்ச்சி இறக்கிற சமயத்தில் முருங்கைப்பூ ஒரு படி தான் போட்டு வடித்திட்டு நாலு நாளைக்கு ஒரு தரம் முழுகவும். பச்சைப் பயறு சீயக்காய் தேய்க்கவும்.

<u>செங்கல்குழம்பு:-</u>

லிங்கம் விராகனிடை.உ, வெங்காரம் விராகனிடை.உ, ரசம் விராகன்.க, வாளம் விராகன்.ச, சின்ன முத்த பருப்பு விராகன்.உ, இந்தச் சரக்கை சுத்தி பண்ணி கல்வத்தில் போட்டு.ச சாமம் அரைத்து வழித்து சிமிழில் வைத்துக் கொண்டு பேதிக்கு பனவெல்லத்தில் குன்றுமணிப் பிரமாணம் கொடுக்கவும். பச்சைத் தண்ணீர் குடித்தால் அதிகம் பேதியாகும். சுடு தண்ணீர் கொடுத்தால் பேதி நிற்கும். சாயந்திரம் வசம்பு சுட்டு சாப்பிடவும்.

<u>பித்த சுரம் ஒரு நாளில் விட குளிகை:-</u>

கெட்டி மிளகு பலம்., கெந்தி ஊதம், வெங்காரம், சுக்கு இதுகள் வகைக்கு வரா.க, வாளம் விராகனிடை.7ந், இவைகளை சுத்தி செய்து இலைக் கள்ளிச் சாறு விட்டு உ.சாமம் அரைத்து மிளகு பிரமாணம் உருண்டை செய்து சுரத்துக்கு வெத்திலைச் சாற்றில் கொடுக்கவும்.

<u>சண்டமாருதக் குழம்பு:-</u>

ரசம், லிங்கம், அரிதாரம், மனோசிலை, ரசதாம்பூரம், சுருநாபி, வெண்காரம், கெவுரி இது வகைக்கு விராகனிடை, வாளம் விராகனிடை. வால் மிளகு, குரோசானி, கண்ட திப்பிலி, அரத்தை, கடுக்காய், தானிக்காய், கிராம்பு, கடுகு, சுக்கு, திப்பிலி, திப்பிலி மூலம், கடுகுரோகணி, பெருங்காயம், கஸ்தூரி மஞ்சள், ஆனைதிப்பிலி, ஓமம், நாகப்பூ இந்துப்பு, வாய்விளங்கம், கோஷ்டம், சாதிக்கம்பி இது இரண்டையும் வகைக்கு விராகனிடை.உ, சிவதை வேர்.½, கொடிவேலி வேர்.½ இது இரண்டையும் நறுக்கி கசாயம் வைத்து திருகுகள்ளிப் பாலும் விட்டு.யஉ சாமம் அரைத்து அயச் சிமிழில் வைத்துக் கொண்டு வியாதிக்கு கொடுக்கவும். சுரத்துக்கு அரத்தை, சுக்கு, கசாயம் வைத்து அதில் குழம்பிடவும். சன்னி.யஅ-க்கும் அரத்தை, சுக்கு, கிராம்பு, திப்பிலி, இஞ்சி, மாவிலிங்கப் பட்டை, வேளை, காட்டாமணக்கு, வெண்நொச்சி வேர் அரைத்து சுரசம் பண்ணி அதில் குழம்பிடவும்.

<u>இருமலுக்கு:-</u>

கடுக்காய் கசாயத்தில் இடவும். சயமீளைக்கு ஆடாதோடை பத்திரி, கண்டங்காலி, ஆடாதோடை சித்தரத்தை, காஞ்சொறி, திப்பிலி, கடுக்காய் இதை இடித்து சுரசம் பண்ணி குழம்பிடவும். பித்த பாண்டு, சோகை, காமாலைக்கு பழச்சாறு வெள்ளாட்டு நீரும் கரிசாலைச் சாறு, மிளகு இதில் குழம்பிடவும். பித்தத்துக்கு சீரகம், மூடக்கொத்தான் இது கசாயம் வைத்துக் குழம்பிடவும். கிராந்தி, அரயாப்பு, சூலை மேகவகை, சுரப்பால், இதற்கு கரந்தைச் சாறு தள்ளிவிடவும். விரைவாதம், அண்ட வாதம், இதற்கு எருக்கம் பூவுச் சாறு கொட்டிச் சாற்றிவிடவும்.

வாய்வுக்கு வேலை, சுக்கு, உத்தாமணி, நொச்சி இதில் குழம்பிடவும். விடத்துக்கு வெற்றிலைச் சாறு அமரி இதில் முள்ளே இடவும். கொள்ளாவிட்டால் வெள்ளரிவிடவும். கரப்பான், குஷ்டம் இதுக்கு அமுக்கிரா சிவனார் வேம்பு, பறங்கிப் பட்டை இதைத் தூள் செய்து புளி விட்டுக் குழப்பி இதில் குழம்பிடவும். மேகம். உக-க்கு உள்ளுறத்திச் சாத்திவிடவும். நுருள்ளைப் பட்டைச் சாறு வேளையில் வெள்ளரிச் சாத்திவிடவும்.

<u>அகத்தியர் குழம்பு</u>:-

ரசம் பலம்.க, தாளகம் பலம்.க லிங்கம் பலம்.க, கெந்தகம் பலம்.க, மனோசிலை பலம்.க, ரசசெந்தூரம் பலம்.க, ரசகற்பூரம் பலம்.க, வெள்ளைப் பாஷாணம் பலம்.க, வெங்காரம் பலம்.க, அரிசித் திப்பிலி பலம்.க, கடுக்காய் பலம்.க, குஸ்திர நாபி பலம்.க இந்துப்பு பலம்.க, வாளம் பலம். முதார் சிங்கி பலம்.க, சரக்கு.யரும் அரைத்து மெழுகாக்கி சிமிழிலடைக்கவும்.

<u>சிவனார் அமிர்தம்</u>:-

ரசம், நெரிவிஷம், நாபி, சுக்கு, திப்பிலி, வெங்காரம், கெந்தகம், மனோசிலை, அக்கிராகாரம், சரக்கு சரி சமன் மிளகு சாமம்.எ-க்கு அரைத்து கொடுக்கலையில் அடைத்துக் கொண்டு வாந்திக்கு கொடுக்கவும். பேதிக்கு கொடுக்கவும். சன்னிக்குக் கொடுக்கவும்.

